அறிஞர்கள் ஞானிகள் வள்ளல்கள் வீரர்கள் ஆகிய உத்தமர்களை ஈன்றெடுத்த நாடு. வளம்பல செறிந்த நாடே பாரத நாடு. வந்தவர்களுக்கு இடங் கொடுத்த தமது சொந்த உரிமையை இழந்திருந்த காலமது. அரசியலில் அன்னியர் அடக்குமுறை வாழ்க்கையில் வறுமை இந்த சூல்நிலையில் கல்கத்தா நகரிலே 1863ம் ஆண்டு தை மாதம் 12ம் திகதியன்று வங்கம் தந்த சிங்கமாம் வீரசந்நியாசி விவேகானந்தர் வந்துதித்தார். கல்விக்கொரு தாகூர், வீரத்துக்கொரு நேதாஜி போல வேதாந்தத்தின் வித்தகர் விவேகானந்தரும் தோன்றினார்.

இவரது பரம்பரை அறிவிலும் ஆன்மீகத்திலும் மகத்தானது. தந்தை விசுவநாததத்தர் ஒரு பேரறிஞர் புகழ்பெற்ற வழக்கறிஞர் ஆவார். தாயார் புவனேஸ்வரிமாதா பாரத பரம்பரையில் வந்த வீரமாது. பாட்டனார் துறவி துர்க்கா பிரசாத்தத்தர், பூபேந்திரர் ஆவார். பெற்றோர் இவருக்கிட்டபெயர் நரேந்திரர். இவரது சகோதரர், தேசிய போராட்டத்தில் சிறைசென்ற போது, இவரது அன்னை ''எனக்குள் இரு கண்கள் உண்டு ஒன்றை தெய்வத்துக்களித்தேன் மற்றதை தேசத்துக்களித்தேன் என்றுகூறி பெருமை பட்டவள் பரம்பரையும் சூழ்நிலையும் மனிதனை உருவாக்குவதில் முதலிடம் வகிக்கிறது.

சுவாமி விவேகானந்தர் சமயத்திற்கு ஆற்றிய பணிகள் பல. பரம்பொருளையறிய இந்து மதம் வகுத்த சாதனைகள் பலவாயினும் நாளடைவில் அதில் மூட கொள்கைகள் குருட்டு நம்பிக்கைகள் புகுந்தன. இதனால் மக்கள் உண்மைகளை மறந்தனர். இவ்வேளையில். ஸ்ரீராம கிருஷ்ண பரம ஹம்சரின் வழித்தோன்றலில் வந்த விவேகானந்தர் ஆன்மாவை வழிப்படுத்தவே மதம் தன்னம்பிக்கையே சிறந்த கடவுள் நம்பிக்கை என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தினார். வேதாந்த உலகிலே வீர இளைஞர்களை உருவாக்கும் பணியில் அஞ்சாது இறங்கிய கர்மவீரர்.

வறுமையில் வாடும் மக்களை மதம் மாற்றுவதால் பயனில்லை. எல்லா மதங்களும் தமக்கென ஒரு தனித்துவத்தை பேணுகின்றன. தம் சொந்த சமயம் மாத்திரம் பிழைத்திருக்க ஏனைய சமயங்களை அழித்துவிட எண்ணாதீர் என்றார். கடவுளைத்தேடி எங்கும் அலைய வேண்டியது இல்லை ஏழைகளின் வடிவில் காணலாம் என்றார். நதிகள் பல ஓடினாலும் இறுதியில் அவை கடலை அடைவது போல எல்லாமதங்களும் இறைவன் ஒருவனையே அடைகின்றன என்றார்.

விவேகானந்தரின் பேச்சிலே அறிவிலே உருவிலே ஒளி காணப்பட்டது. அவ்வொளி அமெரிக்காவிலும் கூட பிரகாசித்தது. 1803ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11 ஆந் திகதியன்று நடைபெற்ற உலக சர்வமத மாகாசபைக்கு இந்து மதத்தின் ஏகப்பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். சிக்காகோ நகரிலே சிங்கநாதம் செய்து இந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்தார். அமெரிக்கர்களிடையே சமயச்சார்பாக ஒரு புதிய சகாப்பத்தையே உண்டாக்கினார்.

சமயத்திற்கு எவ்வாறு பணியாற்றினாரோ அவ்வாறே தமிழுக்கும் சேவையாற்றினார் என்பதை இவரது பெயரால் இயங்கும் விவேகானந்தா சபைகளும், விவேகானந்தா வித்தியாலயங்களும், சான்று பகிர்கின்றன அன்னாரது ஞாபகமாக ஆடி மாதம் 04ம் திகதியை கொண்டாடுகின்றனர். இன்நாளிலே கட்டுரைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள், பேச்சுக்கள் போன்ற ஆக்கங்கள் எழுதப்பட்டு மாணவர்கள் உற்சாகப்படுத்தப்படுகின்றனர். இதனால் தமிழுக்கு ஆற்றிய பணியில் ஒரு துணியாக, அனுராதபுர விவேகானந்தா வித்தியாலயமும் ஒன்றென்பதில் பெருமை கொள்கிறது.

சிக்காகோ விஜயத்தின் பின் தம் தாய் நாடாம் இந்தியா திரும்பும் வழியில் இலங்கையையும் தரிசித்தார். இலங்கையின் முதல் ராஜதானியாப் புகழ்பூத்த அனுராதபுரிக்கும் விஜயம் செய்தார். அதன் பயனாக விவேகானந்தா சபை உருவானது. காலஞ் செல்லச்செல்ல அச்சபையின் ஆலோசனைப்படி 1944ம் ஆண்டு விஜயதசமி நாளன்று விவேகானந்தா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. அன்னாரது நூற்றாண்டு விழாவை 1963ம் ஆண்டு அனுராதபுரி மக்கள் கொண்டாடினர். சிக்காகோ பேருரையின் நூற்றாண்டு விழாவை அண்மையில் அகில இலங்கை முழுவதுமே கொண்டாடியது. இதனால் பொன் விழாக்கண்டு பொழிவுறப்போகும் இவ்வித்தியாலயமும் பெருமை கொள்கிறது.

இவரது வேதாந்த கேசரி நெடுநாள் நீடித்திருக்கவில்லை. இளைஞர்களை நேர் வழிப்படுத்தி அவர்களை உருவாக்கும் பணியில் அயராது உழைத்த மா மேதை 1902ம் ஆண்டு ஆடிமாதம் 04 ஆந் திகதியன்று இவ்வுலகை நீத்தார். அவர் அன்று ஏற்றிய ஞான ஒளி எட்டுத்திக்கிலும் சுடர்விட்டு எரிகின்றது. அன்னாரது புகழ் உலகொங்கும் வியாப்பித்துள்ளது.

S. Renusha Mukthar
Year 9.

★


With Best Compliments
from

JAYANDTHA
Madawachchiya.

Telephone: 025-5639


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS
FROM

*

# LANKA TRADING CO.

118, MAIN STREET,
ANURADHAPURA.

*With Best Compliments*
*from*

*

# *THE NEW CHEAP SIDE*

98, 99, BANK SITE,
ANURADHAPURA.

Telephone: 025-2181

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# අසරණ අයට පිහිටවෙමු

අපි පළමුවෙන් බලමු අසරණයෝ කියන්නෙ කවුද කියලා. අසරණයෝ කියන්නෙ ඉන්න හිටින්න තැනක් නැති, කන්න හොඳ කෑම නැති, ඔවුන්ගේ නිරුවත වසා ගැනීමට හොඳ ගවුම් නැත්නම් හොඳ ඇඳුම් නැති අයට අසරණයෝ කියනවා. මෙම අය විතරක් නෙමෙයි තවත් කොටසක් ඉන්නවා ඒ අය ඇස් නොපෙනෙන අය, අම්මලා තාත්තලා නැති ළමයින්, අත් පා නැති අය, ලෙඩ දුක් වලින් පිරී ඉන්න අයට අපි අසරණයෝ කියලා කියනවා.

මෙම අය වගේ මිනිසුන් අපේ රටේත් හුඟක් ඉන්නවා. ඒ අයට රජයෙන් නිවාස සහ කෑම බීම දෙනවා. පිටරට සෝමාලියාව වැනි රටවල ඉන්න අයට පෝෂණ ආහාර නැතුව මැරෙනවා. මෙම අයට දියුණු රටවලින් ආධාර කරනවා. අප පාරේ ගමන් කරන කොට ඇස් නොපෙනෙන අයෙක් පාරෙන් එහා මෙහා යනවිට ගලක් කකුලෙ පැටලිලා වැටුණා, එවිට අපි ඒ ඇස් නොපෙනෙන මනුෂ්‍යාව උස්සල තියන්න ඕනෙ.

අපි දැනගත යුතුයි අසරණ අයට පිහිට වෙන්න ඕන බව. අපට පුළුවන් විදිහට උපස්ථාන කරන්න ඕනෙ. අපේ අසල්වැසියකුට ලෙඩක් දුකක් හැදුනවිට අපි අපට පුළුවන් තරම් උපස්ථාන කරන්න ඕනෙ. ඔවුන්ට බෙහෙත් අරන් දෙන්න ඕනෙ. එහෙමත් නැත්නම් සල්ලි වලිනුත් උදව් කරන්න ඕනෙ. අනාථ කඳවුරට ගිහිල්ලා අසරණ වුණ අයට එක වේලක් කන්න දෙන්න ඕනෙ. ඉන්ඩ හිටින්න, කෑමක් බීමක් නැති අය අපි හඳුන් වන්නෙ හිඟන්නො හැටියටයි. මේ මිනිස්සු අපේ ගෙදරට පැමිණි විට අපි ඔවුන්ව යවන්නෙ නැතුව ඔවුන් සල්ලි වලින් නැත්නම් හාල් වලින් සහ අපිට අඳින්න බැරි හොඳ ඇඳුම් ඒ අයට දෙන්න ඕනෙ. අපි කෑම කන වෙලාවල ආවොත් අපි කෑම ටිකක් දෙන්න ඕනෙ. අපි දානයක් දෙනවිට පාර්සල් කරල හිඟන්නන්ට නැත්නම් අසරණ අයට දෙන්න ඕනෙ.

බුද්ධාගමේ බුදුන් වහන්සේ රැයක් දවාලක් නැතුව අසරණ අයට උපස්ථාන කලා. අපි පොහොසත් වී ඉන්නකොට අසරණ අයට සලකන්න ඕනෙ. සල්ලි අද අපි ළඟ තිබෙයි හෙට වෙනත් කෙනෙකුට යයි. මේනිසා සල්ලි අපිළඟ තියෙනවිට අසරණයන්ට උදව් කරන්න ඕනෙ. සමහර අය හිඟන්නො ආවොත් සලකන්නෙ නෑ. ඔවුන්ව යවනවා. එවිට හිඟන්නො හරිම වේදනාවකින් යනවා. සමහර දවස්වල ඔවුන්ට හම්බුවෙන තුට්ටුදෙකෙන් ඔවුන්ට කන්න මදි. මේනිසා ඒ අය බඩගින්නෙ ඉන්නවා. ඒ අය බඩගින්නෙ අපේ ගෙදරට එනවිට අපි ඒ අයට කෑමබීම දෙන්න ඕනෙ. අපි හැමෝම එක වගේ නැහැ. සමහරු තණ්හා කාරයෝ, සමහරු හොඳ මිනිසුන්. මේනිසා අපි හැමෝම එක වගේ වෙන්න ඕනෙ.

අපිත් දවසක අසරණ වෙනකොට කෑමක් බීමක් නැතුව හිඟන්නො බවට පත්වෙනවා. දුප්පත් ළමයින්ට රජයෙන් ආහාර මුද්දර දෙනවා, නොමිලේ ඇඳුම්, පොත් දෙනවා. මේවගේ සුදුසුකම් ඒ අයට ලබාදෙනවා.

මේ නිසා අපට පුළුවන් විදිහට අසරණ අයට උපකාර කරන්න ඕනෙ.

ඩී. පී. නික්ශන්
9 වසර
සිංහල



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මගේ පාසැල

මගේ පාසැල අ/විවේකානන්දා දෙමළ මහා විද්‍යාලය. එය පිහිටා තිබෙන්නේ අනුරාධපුර නව නගරයේය. මගේ පාසැලේ ළමුන් පන්සියයක් පමණ ඉගෙනුම ලබනවා. ගුරුමහත්මීන් විසිදෙනෙක් හා ගුරුමහත්වරුන් දහ දෙනෙක් පමණ සේවය කරති. මගේ පාසැලේ ගොඩනැගිලි නවයක් තිබේ. මගේ පාසැලේ විද්‍යාලපති තුමා ජුනයිදීන්.

මගේ පාසැලේ පළමු වසර සිට දහතුන වන වසර දක්වා පන්ති තිබෙනවා. මගේ පාසැල ආරම්භ කරන ලද්දේ 1944 වර්ෂයේ වන නිසා මෙම වර්ෂයේ අගෝස්තු මාසය වනවිට එයට වසර පනහක් සපිරේ.

මගේ පාසැල මේ අයුරින් දියුණු වීම ගැන පුංචි මම සතුටු වෙන අතර එය තව තවත් දියුණු වේවායි මගේ එකම පැතුමයි.

5 පර්වින් සියානා
වසර - 7


*With Best Compliments*

*from*

**Modern Hardware**

**No. 92, Main Street,**
**Anuradhapura.**

**Telephone: 025-5225**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முதல் மாணவன்

## அமரர் ம. கணேசமூர்த்தி

''கணேஸ்'' என மற்றவர்களால் அன்பாக அழைக்கப்பட்ட கணேசமூர்த்தி அவர்கள் அமரர் ஆகி ஆண்டுகள் பல ஆகிவிட்டபோதும் - அவர் நினைவுகள் - அவரை அறிந்தவர்கள் பழகியவர்களால் என்றும் மறக்கப்பட முடியாதவை.

இன்று அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயம் பொன் விழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூற வேண்டிய ஒருவராக இருக்கின்றார்.

இவர் பழையநகரில் பழங்குடிமரபில் வந்த மயில்வாகனம் பொன்னம்மா தம்பதியினருக்கு புத்திரனாக 1938ம் ஆண்டு ஆடி 13ந் திகதி பிறந்தார். இவர் இளமையிலேயே துடிதுடிப்புள்ளவராக விளங்கினார். பழையநகரில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது பாடசாலையின் முதல் மாணவராக இவரே சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆரம்பக்கல்வியை இங்கு பெற்றுக் கொண்ட அமரர் அவர்கள் உயர்கல்வியை தொடரும் நோக்குடன் அநு/ புனித வளவன் கல்லூரியில் மாணவராகச்சேர்ந்து திறமையாகத் தேர்ச்சிபெற்றார். இவர் தொடர்ந்து கொழும்பு சட்டக்கல்லூரியில் 1958 புரட்டாதி மாதத்தில் மாணவராகச் சேர்ந்து சிறப்புத் தேர்ச்சி பெற்று 1962ம் ஆண்டு சத்தியப்பிரமாணம் மேற்கொண்டு தான் பிறந்த மண்ணிலேயே தனது தொழிலை (பிரசித்தி பெற்ற வழக்கறிஞரும், நொத்தாரிசுமான அமரர் நடராசா அவர்களோடு ஆரம்பித்தார் ) வன்செயல்களினால் இவர் பாதிக்கப்பட்டபோதும், தான் பிறந்த மண்ணைவிட்டுப் போகாது மீண்டும் தொழிலை ஆரம்பித்தார். 1985ல்மாவட்டநீதவான் நீதிமன்றின் பிரதி நீதியரசராகவும் நியமனம் பெற்றார். இக்காலத்தில் வன்செயல் மீண்டும் ஆரம்பமாகியது. இராணுவமுகாமில் இவரையும் இவர் குடும்பத்தவரையும் விஷேட விமான மூலம் யாழ் அனுப்ப ஒழுங்குகள் செய்யப்பட்டபோதும் தான்மட்டும் பாதுகாப்புடன் செல்ல விரும்பாது. ஏனையவர்களையும் பாதுகாப்புடன் ஏற்பாடுகளைச் செய்து முடித்தபோது காலன் அவரையும் இரு பிள்ளைகளையும் இராணுவச்சிப்பாய் ஒருவனின் துப்பாக்கிக்குப் பலியாக்கினான்.

இவர் பாடசாலையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்துள்ளார் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் முக்கிய பதவிகளைக் காலத்துக்குக் காலம் வகித்துள்ளார். வன்செயல்களினால் பாடசாலை மூடப்படாது இன்று பொன்விழாக் காணும் நிலைக்கு வந்தமைக்கும் அவர் பல வழிகளிலும் செயலாற்றியுள்ளார். இது மட்டுமன்றி அநு/ விவேகானந்த சபையின் வளர்ச்சிப்பாதையிலும் இவரின் செயற்பாடுகள் பாராட்டப்படவேண்டியதாகும். இங்கும் முக்கிய பதவிகளை வகித்துள்ளார்-அத்துடன்-சாரதா பாலர் பாடசாலை, பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா மண்டபம் என்பன அமைக்கும் பணியிலும் முதன்மை வகித்தவர் இவரேயாவர். அத்துடன் வெளியிடங்களில் இருந்து தொழில் புரிந்தவர் நலன் கருதி விடுதி, சிற்றுண்டிச்சாலை என்பவற்றை அமைக்கவும் காரண கர்த்தாவாக விளங்கியவர் இன்று எம் மத்தியில் இல்லை.

இவர் பொதுப்பணியில் மட்டுமன்றி சமயத்துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். இளமையில் இவரிடம் காணப்பட்ட சமயப்பற்றும் தெய்வநம்பிக்கையும் இதற்குக் காரணமாய் அமைந்தது அநு/ஸ்ரீ கதிரேசன் கோயில் நிர்வாக சபையில் காலத்துக்குக் காலம் பல பதவிகளை வகித்தவர். சில ஆண்டுகள் தலைமைப்பதவி வகித்துள்ளார். இவர் பொறுப்பிலேயே குடும்பக கோயில்களும் இருந்து வந்ததும் குறிப்பிடத்தகுந்தது.

இத்தகைய தகைமைசான்ற ம. கணேசமூர்த்தி இன்று எம்மத்தியில் இல்லை. பாடசாலை பொன் விழாக் காணும் இவ்வேளையில் முதல் மாணவன் எம்மத்தியில் இல்லை. அவர் மறைந்துவிட்டாலும் அவர்தம் பணிகளும், அவர்தம் புன்சிரிப்பும் அவருடன் பழகியவர்களால், நண்பர்களால் மறக்கப்பட முடியாத ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

# RAZAK STORES

**Dealers in Automotive Battery & Bicycle,**

**Bicycle Accessories.**

**93, MAIN STREET,**

**ANURADHAPURA.**

**Telephone: 025-2778**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கியல் எண்ணக்கருக்கள்
# ACCOUNTING CONCEPTS.

நிறுவனங்கள் நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்கும் போது அதனைப் பயன் படுத்துவோர் விளங்கிக் கொள்ளத் தக்க வகையில் அவை தயாரிக்கப்படல் வேண்டும். அதாவது, நிதிக் கூற்றுக்களில் இடம் பெறும் விடயங்களை அதனைப் பயன்படுத்துவோர் மிகவும் எளிதாக விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் அந் நிதிக் கூற்றுக்கள் அமைந்திடுத்தல் வேண்டும் இவ்வாறு இலகுவாக விளங்கிக் கொள்வதற்காக சில கணக்கியல் கொள்கைகள், வழமைகள், எண்ணக்கருக்கள் என்பவற்றைப் பின் பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளன. அவ்வாறு பின் பற்றப்படும் எண்ணக் கருக்களை கீழ்க் கண்டவாறு வகைப்படுத்தலாம்.

## தொழில் முழுமைக் கூற்றுப் பற்றிய எண்ணக்கரு
## The Business Entity Concept

எல்லா வியாபார அமைப்புக்களும் அதன் உரிமையாளரிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவதனையே இவ் எண்ணக் கரு விளக்குகிறது. அதாவது, எந்தவொரு வியாபாரஸ்தாபனத்தை எடுத்துக் கொண்டாலும் அதன் உரிமையாளர் வேறு வியாபாரம் வேறு என்ற அடிப்படையிலேயே கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதேயாகும். உதாரணமாக ஒரு தனி வியாபாரத்தில் அதன் உரிமையாளர் 25,000/- வினை மூலதனமாக இட்டிருந்தால் அவ் 25,000/-வும் நிறுவனத்தின் கடன் எனக் கருதப்பட்டே கணக்குகளில் பதியப்படும்.

## தொடர்ந்து செல்லும் வியாபார அமைப்பு பற்றிய எண்ணக்கரு
## Going Concern Concept

ஒரு வியாபார நிறுவனமானது நட்டத்தில் இயங்காது இலாபத்திலேயே இயங்க வேண்டும் என்றும் அது கால வரையறையற்ற பல ஆண்டுகளுக்கு தொடர்ந்து இயங்க வேண்டும் என்று இவ் எண்ணக் கரு கூறுகிறது இவ் எண்ணக்கருவின் அடிப்படையிலேயே கணக்குகளில் அட்டுறுக்கள், முற்பணங்கள் என்பன பதியப் படுகின்றன நிறுவனமானது தொடர்ந்து இயங்கினாலேயே அட்டுறுக்கள் கொடுத்துத் தீர்க்கப்படும். இவ் எண்ணக்கருவிற்கு எதிராக ஒரு வியாபார ஸ்தாபனமானது இடைக்காலத்தில் கலைக்கப் படுமாயின் அதன் ஐந்தொகையின் சொத்துக்கள் யாவும் புத்தகப் பெறுமதியை விட குறைந்தே தேறும்.

## பணம் ஓர் பொது அலகு எனும் எண்ணக்கரு
## Money as a Commoun Denominator

கணக்கியலில் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் அனைத்தும் பணத்தின் அளவிலேயே குறிப்பிடப்பட்டு தயாரிக்கபடுகின்றன. அதாவது பணத்தினால் அளவிட முடியாத எதனையும் கணக்குகளில் சேர்க்க முடியாது என்பதனையே இவ் எண்ணக்கரு கூறுகிறது. உதாரணமாக ஒரு நிறுவனத்தில் ஒவ்வொன்றும் 100,000/- பெறுமதியான 5 கார் நிற்குமாயின் கணக்குகளில் 5 கார் எனப் பதியப்பட மாட்டாமல் அதன் பணப் பெறுமதியே பதியப் படும். அதாவது 500,000/- என பதியப் படும்.

## பணத்தின் உறுதித் தன்மை பற்றிய எண்ணக்கரு
## Currency Stability Concept

பணத்தின் உறுதித்தன்மை என்றும் மாறாமல் உறுதியாக இருக்கிறது என்ற கருத்திலேயே கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் அதாவது, காலத்திற்குக் காலம் பணவீக்கம், பணச்சுருக்கம் என்பவற்றால் ஏற்படும் பணப் பெறுமதிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவு அல்லது அதிகரிப்பு என்பன கணக்குகளில் செல்வாக்குச் செலுத்துவதில்லை என்பதையே இவ் எண்ணக்கரு எடுத்துக் கூறுகிறது.

### வருமானங்களை செலவுகளோடு ஒத்துப்பார்த்தல் பற்றிய எண்ணக்கரு
### Matching of Income with Expentition

ஒரு நிதியாண்டின் இலாப நட்டம் கணிப்பிடும் போது அந்த ஆண்டிற்கான வருமானம் அவ்வாண்டில் ஏற்பட்ட செலவுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டே இலாப நட்டம் கணிப்பிடப்படுகிறது. இவ்வாறு செய்யும் போது அவ்வாண்டுக்கான வருமானம் வருமானச் செலவுகளுடன் ஒப்பிடப்படுகின்றன என்பதனையே இவ் எண்ணக்கரு கூறுகிறது. ஆயினும் ஒப்பிடுதலின் போது சில சிக்கல்கள் காணப்படுகின்றன. உதாரணமாக இயந்திரத்திற்கு ஓர் குறிப்பிட்ட ளவு தொகை பெறுமானத் தேய்வாக ஒவ்வோர் ஆண்டிலும் பதிவழிக்கப்படுகிறது. ஆனால் அவ் இயந்திரத்தின் முழுப் பெறுமதியும் பதிவழிக்கப்பட்ட பின்னரும் அவ்வியந்திரம் பயன்படுத்தப் படுவதனைக் கூறலாம்.

### இரட்டை விளைவுக் கோட்பாடு பற்றிய எண்ணக்கரு
### Dauble aspect Concept

வியாபார நடவடிக்கைகள் யாவும் இரண்டு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஒரு விளைவு சொத்தாகவும், மற்றைய விளைவு அச் சொத்துக்கு எதிரான பரிப்புமாதம் என்பதனையே இவ் எண்ணக்கரு கூறுகிறது. அதாவது,

சொத்துக்கள் = கடன் பரிப்புக்கள் + மூலதனம் என்ற கணக்கியல் சமன் பாட்டைக் கொண்டதாக இவ் எண்ணக்கரு காணப்படுகிறது.

### கைக் கெட்டிய எண்ணக்கரு
### Realisation Concept

கணக்கியலில் ஒரு நடவடிக்கை நடந்ததும் வருமானம் கிட்டியதாக கருதப்பட்டு கணக்குகள் தயாரிக்கப் படுவதனையே இவ் எண்ணக்கரு கூறுகிறது. ஆனால் அக் குறிப்பிட்ட நடவடிக்கையால் பணம் இன்னும் நிறுவனத்திற்கு வந்து சேராமலும் இருக்கலாம் உதாரணமாக கடனுக்கு பொருட்கள் விற்கப்பட்டதும் இலாபம் தேறியதாக கருதப்பட்டு கணக்கு வைக்கப்படும். ஆனால் அந்நிதியாண்டின் முடிவுத் திகதிவரை பணம் வந்து சேராமல் இருப்பதனை குறிப்பிடலாம்.

### அட்டுறு எண்ணக்கரு
### Accrual Concept

ஒரு வியாபாரத்தின் வருமானங்கள் பெற்றாலென்ன பெறாவிட்டாலென்ன செலவீனங்கள் கொடுத்தாலென்ன கொடுக்காவிட்டாலென்ன வருமானங்கள் அனைத்தும் பெறப்பட்டன என்றும் செலவீனங்கள் அனைத்தும் கொடுத்துத் தீர்க்கப்பட்டன என்ற அடிப்படையிலும் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதனை இவ் எண்ணக்கரு கூறுகிறது. உதாரணமாக ஒரு நிறுவனத்தின் மின்சாரத்திற்கான செலவு 5000/- என்றும் அதில் 3000/- மட்டும் கொடுக்கப்பட்டால் கணக்குளின் 3000/- எனப்பதியாமல் 5000/- எனப்பதிந்து மிகுதி 2000/- வையும் ஐந்தொகையில் அட்டுறுவாக காட்டப் படுதல் வேண்டும்.

### கிரய எண்ணக்கரு
### Cost Concept

ஒரு வியாபாரத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் அதன் கொள்விலையிலேயே பதியப்படல் வேண்டும் என்பதனையே இவ் எண்ணக்கரு கூறுகிறது. அதாவது ஒரு பொருளின் கொள்விலையிலும் பார்க்க அதன் சந்தைவிலை கூடுதலாகக் காணப்பட்டாலும் கொள்விலையே கணக்கில் காட்டப்படல் வேண்டும் என்பதனையே இது குறிக்கிறது.

**T. உதயகுமார்**
இணைந்த பல்கலைக்கழகம்
அநுராதபுரம்.

# இயற்கையே இன்ப ஊற்று

"பூமி மேலே புதுப்பார்வை கொள்க
இயற்கை மேலே இன்னும் இச்சை கொள்க-கொஞ்சம்
நிலவுக்கு நேரம் வைத்து தூக்கம் கொள்க
மண்ணுக்குள் வேரைப் போல வெற்றி கொள்க."

—கவிஞர் வைரமுத்து.

இயற்கையே இன்ப ஊற்றென்பேன்-என்
உயிரின் மூச்சும் அஃதென்பேன்.

மனுஷ சிருஷ்டிப்புகள் மலிந்து போனாலும்
மாடி மனைகள் விண்ணோக்கி உயர்ந்தாலும்
மரணம் வந்தென் வாசல் மிதித்தாலும்
இயற்கையே இன்ப ஊற்றென்பேன் — என்
உயிரின் மூச்சும் அஃதென்பேன்.

குளிர் படுத்தியதோர் அறையில் குஷியாய் இருந்தாலும்
குளிரூட்டி வாகனத்தில் குதூகலமாய் அலைந்தாலும்
தென்றலின் சிலிப்பும் தேனமுதத் தவிப்பும்
குளிரூட்டி தான் தராதென்பேன்
ஆற்றங்கரை யழகும் பனித்திரை விரித்த பசுமையும்
இயற்கையின் இதமும். தென்றலின் குளிர்மையும்
இதயம் கொள்ளை கொள்ளுகையில்
இயற்கையே இன்ப ஊற்றென்பேன்-என்
உயிரின் மூச்சும் அஃதென்பேன்.

குறோட்டன் குவியலாய் நட்டாலும்
தோட்டம் நகரில் இட்டாலும்
பாடிபறக்கும் பறவைகளின் கீச்சொலியோடு
சேவலும் கூவி ஆங்கோர் காலை புலருகையில்
அதை வெல்லும் அழகு நகரிலே இல்லையென்பேன்
இயற்கையே இன்ப ஊற்றென்பேன்-என்
உயிரின் மூச்சும் அஃதென்பேன்.

பவனி வரும் கார்கள், தெருவிளக்கின் ஒளி
பசும் பொன் வயலின் வளப்பள்ளி வருமா......
கவிதரும் கலையழகும் கானக்குயிலோசையும்
கிராமத்தின் எழிலோடு சங்கமிக்கையின்
இயற்கையே இன்ப ஊற்றென்பேன்-என்
உயிரின் மூச்சும் அஃதென்பேன்.

பட்டாசு நூறு விட்டாலும்
பறந்து வானையது தொட்டாலும்
மின்னலின் மகோன்னத மலர்வும்
மனசோடு ஒளிரும் நிலவின் இதயமும் வழங்கும்
இயற்கையே இன்ப ஊற்றென்பேன்-என்
உயிரின் மூச்சும் அஃதென்பேன்.

**M. G. பௌமியா**
ஆண்டு - 10.
விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS
FROM

*

**SALEEM STORES**

Dealers in:- TEXTILES, RADIOS, WALL CLOCKS,
WATCHES & FANCY GOODS ETC.

No. 8, MARKET SITE,
ANURADHAPURA.

Telephone: 025-2944



*With Best Wishes*
*from*

*

***D. S. Gunasekera & Co., Ltd.***

DISTRIBUTORS FOR CEYLON TUBACCO

MAIN STREET,
ANURADHAPURA.

Telephone: 025-2390



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட பொருட்காட்சி

எனது பாடசாலையில் கல்வி சம்பந்தமான பொருட்காட்சி ஒன்று கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்றது இதில் சகல ஆசிரியர்களும், மாணவர்களும் பாடரீதியாகவும், வகுப்பு ரீதியாகவும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஐந்து வரையிலான மாணவர்கள் எண், மொழி, கைப்பணிவேலைகள் கொண்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகள் தமது ஆசிரியர்களின் துணையோடு செய்திருந்தனர். எண், சம்பந்தமாக எண் சட்டம், எண்கோலம், கோண வரைபுகள் என்று அது பற்றிய பாட விளக்கங்களை வரைபடம், உருவங்கள் மூலம் செய்திருந்தனர். மொழியை விளக்கும் வரைபடங்கள் அழகாக செய்திருந்தனர். சுற்றாடலில் கிடைக்கும் கழிவுப்பொருட்களைக் கொண்டு அழகிய சித்திரங்கள், கைப்பணி ஆக்கங்கள் செய்திருந்தனர். மேலும், அசையும், அசையா உருவ ஆக்கங்களை காட்போட், களிமண் கொண்டு கவர்ச்சியூட்டும் விதத்தில் அமைத்திருந்தனர்.

ஆண்டு ஆறு தொடக்கம், ஆண்டு 13 வரையிலான மாணவர்களும் தமது பாடசம்பந்தமாக தமது ஆசிரியர்களின் வழிகாட்டலோடு பல அரிய அம்சங்களை வழங்கியிருந்தனர் கணிதம் விஞ்ஞானம், சமூகக்கல்வி, சித்திரம், மனைப் பொருளியல், விவசாயம் என்ற பாட அலகில் தமது செயற்பாடுகளைத் தனியாகவும், குழுவாகவும் அமைத்திருந்தனர்.

கணிதத்தில் எண்கோலம், பல்கோணி, சம சீர்கேத்திர கணித வடிவங்கள் என்றிவ் வாறாக தாம் கற்ற பாட அலகிலிருந்து செய்திருந்தனர். விஞ்ஞானத்தில் பல வரைபடங்களாகவும் ஆக்க உருவங்களாகவும் செய்திருந்தனர். மின்னோட்டம், முலையூட்டிகள் போன்று பல்தரப்பட்ட அம்சங்கள் செயலுறுப்பெற்றிருந்தன. சமூகக் கல்வியில் இலங்கையின் தரைத்தோற்றம், காலநிலை மலைநாடு. பயிர்ச்செய்கை, கைத்தொழில் நிலையங்கள் போன்ற பல்வகை அம்சங்கள் செயப்பட்டிருந்தன. மனைப்பொருளியலில் தையல், வாயூறும் சுவை இனிப்பு பண்டல்கள், பல்வகை மலர்கள், பொம்மைகள் போன்றனவும் சித்திரத்தில் பலதரப்பட்ட சித்திர வகைகளும் விவசாயத்தில் வீட்டுத் தோட்டம், பயிர்ச்செய்கை படி முறைகள் போன்றனவும் செய்திருந்தனர். ஆண்டு - 7 மாணவனாகிய நானும் கணிசமான அளவு என் பங்களிப்பைச் செய்திருந்தேன்.

இதில் பிரதம அதிதியாக எமது கல்விப்பணிப்பாளர், பிரதி கல்விப்பணிப்பாளர்கள் சமூகந்தந்திருந்தனர். அதிபர், பிரதி அதிபர்கள், தம் மாணவர்களின் செயற்பாடுகளை அவர்களுக்கு விளக்கினர். ஆசிரியர்கள் தம் பொறுப்பில் உள்ள இடத்திலிருந்து பிரதம விருந்தினர்களுக்கு மாணவர் மூலமாக விளக்கங்களைக் கூறினர். அதைக் கண்டு, கேட்டு எமது பொருட்காட்சி நன்றாக இருந்ததெனக் கூறினர். சிலவற்றில் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழங்கினர். இனிதாக முடிவுற்ற இதுவே நான் கண்ட பொருட்காட்சியாகும்.

**M. M. முஹம்மட் ரம்ஸீ**
ஆண்டு - 7

எப்போதும் எதையும் கொடுப்பவனாக இருப்பாயாக; பிரதியாக எதனையும் எதிர் பாராதே! அன்பைக் கொடு. விலை பேசுவதை விட்டுவிடு. எந்தவிதமான நிபந்தனையுமின்றி, ஆண்டவன் நமக்குக் கொடுப்பதுபோல நாமும் நமது தாராள குணம் காரணமாகப் பிறருக்கு கொடுப்போமாக.

—சுவாமி விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

**CITY TIMBER DEPOT.**

16, Mosque Road,
Anuradhapura.

**HAMEEDIYA HOTEL**

81, MAIN STREET,
ANURADHAPURA.

Telephone: 025-2675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்

**"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"**

என்ற வள்ளுவர் வாய் மொழிப் பொருளை உலகம் ஒருவறாக ஒப்புக் கொள்ளும் நிலை மலர்ந்து விட்டது. அவ் வாய் மொழி ஊனக்கண்ணிலும் ஞானக் கண்ணே சிறந்தது. என்பதை வழியுறுத்து கின்றது. ஊனக்கண்ணின் காட்சிக்கு ஓர் எல்லை உண்டு. அவ்வெல்லைக்கு அற்பாற் பட்ட எதையும் அது காணமுடியாது. அன்றியும் அது நோயாலும் முதுமையினா லும் கூர்மை குன்றி காட்சிப் பண்பை இழத்தல் கூடும். எனினும் அறிவுக் கண் ணானது எதனாலும் தடைப்படாது. கண்காணாத தேசங்களில் நிகழ்வன பற்றி யும் எதிர் காலத்தில் நிகழப் போவன பற்றியும் காணும் ஆற்றல் உடையது. அது நோயாலோ முதுமையாலோ ஒளி இழப்பதில்லை. அதனாலேயே கல்விகற்று அறிவு படைத்தோர் "கண்ணுடையர்" என சிறப்பிக்கப் படுகின்றனர். கற்காதோர் ஊனக்கண்ணாலும் பயன் கொள்ள முடி யாமையால் 'முகத்திரண்டு புண்ணுடை யர்" என இழிக்கப்படுகின்றனர். இக் குறள் ஒன்றே அறிவு வளர்ச்சிக்கு உபசா ரப்படும். கல்வியின் சிறப்பையும் பயனை யும் எடுத்துக் காட்டப் போதியதாகும்.

இத்தகைய கல்வியைப் பெற்று பயன் கொள்வதற்கு இன்றுள்ள நிலையில் பற்பல சாதனங்கள் காணப்படுகின்றன. அவற் றுள் நூல், வானொலி. படக்காட்சி, தொலைக்காட்சி, சித்திரம், பிரயாணம் போன்றன குறிப்பிடத்தக்கவை. எனினும் கல்வி எனும் தீபம் உலகில் ஏற்றப்பட்ட அன்று தொட்டு இன்று வரை அதனை அணையவிடாது நெய்யிட்டு ஒளிகாணச் செய்கின்ற பெருமை நூல்களுக்கே உண்டு கல்வியை பரப்புவதற்கமைந்த கருவிக ளுள்ளே தாயாக விளங்குவது நூலேயா கும். வானொலி, படக்காட்சி, தொலைக் காட்சி போன்றன ஓரளவு வாழ்க்கை வசதி படைத்தவர்களாலேயே பயன்படுத் தப்படுவன. பாமரமக்களால் அவை பயன் படுத்தப்படுவனவல்ல. அவை கல்வித் துறை கள் அனைத்தையும் திறம்பட அறிவிக்கக் கூடியனவல்ல. எனவே கரையில்லாக் கல்வி யின் ஒவ்வொரு சிறிய பகுதியே அறிவிக் கக் கூடியன. ஆனால் நூல்கள் பாமர மக்களாலும் பயன்படுத்தப்படும் வகையில் உள்ளன. அவை கல்வித்துறைகள் அனைத் தையும் திறம்பட அறிவிக்கக் கூடியன. எனினும் கல்வி எனும் பெருஞ் செல்வத்தை உலகிற்கு மறுக்காது வழங்கும் வல்லமை நூல்களுக்கின்றி பிறிதொன்றுக்கும் இல்லை. இவ்வாறு மண்ணில் வாழும் அனைத்து மக்களும் பகிர்ந்து இன்புறத் தக்க இன்நூல்கள், அவைகளின் இனிய நண்பர்கள் என்பதை யாராலும் மறுக் கவோ மறைக்கவோ முடியாது.

இன்றுள்ள நிலையில் உலகில் உள்ள அனைத்து நூல்களையும் எரித்தாலோ கடலில் இட்டு அழித்தாலோ என்ன நிக ழும் என்பதை கற்பனை கண்கொண்டு கூட காண முடியாத அளவிற்கு அவை மக் கள் வாழ்வோடு இணைந்துவிட்டன. மனி தன் நூல்களால் அளப்பரிய பயன்கள் பெற்று வந்தமையே அவ்வன்புப் பிணைப் பிற்கான காரணமாகும்.

அந்நற் பயன்கள் மனிதனாலே தேடப் பாலனவாகிய பெரும் பொருட்கள் என ஆன்றோர் கூறுவர் அவை அறம், பொருள், இன்பம், வீடு என நால்வகைப்படும். இத னையே புருடார்த்தம் எனவும் வழங்கு வர். இவை மனிதவாழ்விற்கு மிக இன்றி யமையாதனவாகையால். இவ்வாறு புகழ்ந்துரைக்கப் படுகின்றன. தனிமனித வாழ்விற்கும் சமூகவாழ்விற்கும் தீயன நீக்கி நல்லன கொள்ளும் அறங்கள் பலவும் மனித உள்ளத்தில் வளர்தல் வேண்டும். இந்த அறவுணர்வே, உலக நல்வாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முளை கொள்ளும் இடம். அறவுணர்வு மிக்கவன் அறவழி நடந்து, தீயவைகளை விட்டு பொருளீட்ட விளைவான். அவ்விதப் பொருளை நுகர்தலே மேலான இன்பம். இன்பத்தின் நிலையாமையை உணர்ந்து உலகப் பற்றை நீக்கி தவம் செய்து விடுதலை அடைய முயல்வதே வீடு எனப்படும். இந்நாற்பொருட்களையும் விரிவாகவும் மலங்கொள்ளும் வகையில் நூல்கள் பற்பல முறைகளில் வலியுறுத்துகின்றன. "அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே" என்ற சூத்திரம் நூல்களின் பயனை எடுத்துக் கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலனாகும். அந் நற்பயன்கள் மனிதன் பூரணவாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டியாய் அமைவதே நூல்களின் முப்பயனும் நெடுப்பயனும் ஆகும் இவ்வாறு கல்வி கற்று நல்கிய அன்பினால் அறிவூட்டும் இனிய நண்பர்கள் இப் பூமிதனில் உண்டோ?

மனிதவாழ்விற்கு மிக இன்றியமையாத கல்வி எனும் சுடரை உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவச் செய்கின்ற ஒப்பற்ற கருவிகளாய் நூல்கள் மதிக்கப்படுகின்றனர். இந் நூல்கள், மனிதன் தேவையான போது தேவையான அளவு கல்வியைக் கற்று இன்புறுவதற்கு அமைந்த களஞ்சியங்களால் ஆனவை. எம்சக நண்பர்களிலும் பார்க்க பேருதவி புரிகின்றன. அவப்பொழுதையும் தவப்பொழுதையும் கழித்ததற்கேற்ற அருமருந்தன்ன கருவிகளாய் ஆனது சுருங்கக் கூறினால் இன்றுள்ள நிலையில் நல்ல நூல்கள் ஆவன நல் ஆருயிர் நண்பர்கள் போன்று போற்றிப் புகழ்பட வேண்டியனவாகும்.

**எம். ஜௌஸானா**
ஆண்டு - 10.
அ/விவேகானந்தா த.ம.வி.


*With Best Compliments*

*from*

**

# Wijaya Grain Centre

**Puttalam Road,**
**Nochchiya Gama.**

**Telephone: 025-7812**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக் கல்வியும் மாணவர் சமுதாயமும்

## எஸ். எச். ஜெயினுலாப்தீன் பிரதி அதிபர்

உலகில் எந்தவொரு நாட்டைச் சேர்ந்த மாணவனுக்கும் அந்த நாட்டின் வரலாற்றுக் கல்வி அவசியமாகும். அந்த நாட்டின் வரலாற்றுக் கல்வி மட்டுமன்றி உலகின் வரலாற்று போக்கையும் அறிந்து வைத்திருத்தல் அவனுக்கு அவசியமாகின்றது.

இலங்கை மாணவரைப் பொறுத்த மட்டில் ஆண்டு ஆறு தொடக்கம் வரலாற்றுக்கல்வி போதிக்கப்படுகின்றது. வரலாறும் சமூகக்கல்வியும் எனும் பாடத்தினூடாக வரலாறு கற்பிக்கப்படுகின்றது. ஆண்டு பதினொன்று கற்றதன் பின்பு க. பொ. த. (சாராணம்) பரீட்சை எடுக்கும் பொழுது வரலாறும் சமூகக் கல்வியும் என்னும் பாடத்தில் சுமார் 40 வீதமான வினாக்கள் வரலாற்றுப் பகுதியிலிருந்து வினாவப் படுகின்றது. வரலாறும் சமூகக்கல்வியும் எனும் பாடத்தில் சிறப்பாக சித்தியடைவதற்கும் மேலும் கல்வியைத் தொடர்வதற்கும் வரலாற்றுக் கல்வி அவசியமாகின்றது. க. பொ. த. (உயர்தர)த்தில் வரலாறு தனிப்பாடமாக கற்பிக்கப்படுகின்றது.

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் போது பொதுவாக மாணவர்கள் வரலாற்றுப் பாடத்தில் குறைவாகவே புள்ளிகள் பெறுவதை ஆண்டு தோறும் கவனிக்க முடிகின்றது. இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதிலும் இந் நிலைமையை மாற்றியமைப்பது ஆசிரியர்களினதும், மாணவர்களினதும், கடமையாகும். உண்மையில் வரலாற்றுப்பாடம் ஒருகடினமான பாடமுமல்ல.

வரலாறு என்பது 'நடந்து முடிந்த கதை' எனப் பொதுவாக கூறப்படுகின்றது. மனித சமுதாயம் நடந்து வந்த பாதையை மாணவன் திரும்பிப் பார்க்கின்றான் பெருமை கொள்கின்றான் புலகாங்கித மடைகின்றான் எதிர்காலம் அவனுக்குத் தெரிகின்றது.

வரலாற்றைக் கற்கும் மாணவர்கள் பரீட்சையை மட்டும் மையமாகக் கொண்டு கற்காது விரிந்து பரந்த நோக்கில் கற்றல் அவசியமாகும்.

வரலாற்றைக் கற்கும் மாணவர்கள் பின்வரும் நோக்கங்களைக் அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு நாட்டின் பிரஜை தன் தாய்நாட்டின் மீது பற்றுள்ளவனாக இருக்கவேண்டும். இலங்கையின் வரலாற்றைக் கற்கும் மாணவர்கள் ஆதிகாலம் முதல் தற்காலம் வரை கற்கும் போது இலங்கையின் அரசியல், பொருளாதார, சமுதாய. கலாசார, வளர்ச்சியைத் தெளிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இதனால் அவர்களுக்கு தாய்நாட்டின் மீது பற்றும் விசுவாசமும் வளர்கின்றது.

வரலாறு கற்கும் மாணவர்கள் இலங்கையின் வரலாற்றை மட்டும் கற்கவில்லை, உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளையும் அதன் தாக்கங்களையும் கற்கின்றனர். பண்டைய நாகரிகங்களின் வளர்ச்சி பிரதான கண்டு பிடிப்புக்கள், வரலாற்றின் திருப்பு முனையாக இடம் பெற்ற நிகழ்வுகள், மனித இனத்துக்குத் தொண்டாற்றிய சமய அரசியல் தலைவர்கள், உலக சமாதானத்துக்கு உழைத்த பெரியார்கள் முதலான பல விடயங்களை கற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. எனவே இம்மாணவர்கள் உலகினை நேசிக்கும் மனப்பாங்குள்ளவர்களாக மாறுகின்றனர். இன மத நாடு முதலான தடைகளைத்தாண்டி அப்பால் சிந்திக்கும் சக்தி கொண்டு விளங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு கற்கும் மாணவர் தூர நோக்குள்ளவர்களாக, எதிர்காலம் பற்றி எதிர்வுகூறக் கூடியவர்களாக விளங்குவர். நிகழ்காலம் இறந்தகாலத்திலிருந்து வளர்ந்தது விருத்தியடைய முடியும் என்பதையும் அவர்களால் கண்டு கொள்ள முடிகின்றது.

மேலும் இம்மாணவர்களால் இலங்கையிலுள்ள பல்வேறு தேசிய இன மக்களின் பண்பாடுகளைப் பெரிதும் மதிப்பதோடு, அனைத்து இனத்தினது பண்பாட்டு பாரம்பரியங்களை மதிக்கவும் முடிகின்றது.

தேசிய ரீதியில் நிகழும் பிரச்சினைகளில் ஒரு பக்கம் சாராது நின்று நடுநிலையாகச் சிந்திப்பதற்குத் தேவையான அறிவு, மனப்பாங்கு என்பனவற்றை வளர்க்க முடிகின்றது.

உலக வரலாற்றோடு இலங்கையின் வரலாற்றை ஒப்பு நோக்கி விளங்கிக் கொள்ளுதல் வரலாறு கற்கும் மாணவனுக்கு அவசியமாகும். மேலைத்தேச நாடுகள் அறியாமையில் மூழ்கியிருந்த காலத்தில் இலங்கை சிறந்ததொரு பெருமைக்குரிய நாகரிகத்தை கொண்டிருந்தது என்பதையும். எவ்வாறு அது படிப்படியாக வீழ்ச்சியடைந்தது என்பதையும், வெளிநாடுகளின் ஆக்கிரமிப்புகளுக்கு எவ்வாறு உட்பட்டது என்பதையும் அறிவர்.

வெளிநாட்டு தொடர்புகளால் இலங்கைக்கேற்பட்ட நன்மை தீமைகளை விளங்கிக் கொள்வர். இந்தியாவின் அருகே இலங்கை உள்ளமையால் இலங்கையின் வரலாறில் அது ஏற்படுத்திய தாக்கங்களின் நல்ல அம்சங்களையும், தீய அம்சங்களையும். விளங்கிக்கொள்வர் தென்னிந்திய படையெடுப்புகளையும் அதனால் இலங்கை காலத்துக்கு காலம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மேற்கொண்ட பாதுகாப்புடன் இராஜதந்திர நடவடிக்கைகளையும் விளங்கிக் கொள்வர், நண்பர்கள் யார்! பகைவர்கள் யார்! என பிரித்தறியும் அறிவைப் பெறுபர்.

மனித இனத்தின் சாதனைகள் ஒரு நாட்டுக்கோ, இனத்துக்கோ மட்டும் சொந்தமானதல்ல. அவை ஒரு மனித இனத்துக்கும் பொதுவானவை எனும் அறிவை பெறுவர்.

வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றவர்களின் சரிதைகளை அறிந்து அவர்கள் எவ்வாறு புகழ் பெற்றார்கள் என்பதை அறிவதன் மூலம் தங்களின் ஆளுமைப் பண்பை வளர்ப்பர்.

உண்மையைக் கண்டுகொள்ளும் திறமையைம் பெறுவர். தற்போது பத்திரிகைகள். வானொலி. தொலைக்காட்சி. திரைப்படம் முதலான பல்வேறு தொடர்பு சாதனங்கள் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு விடயங்களை உடனுக்குடன் அறியும் வாய்ப்புண்டு எனினும் அவற்றுள் உண்மையும் பொய்யும் மலிந்து கிடக்கின்றன அவற்றைப் பிரித்தறிந்து உண்மையைக் கண்டு கொள்ளும் திறனைப் பெறுவர்.

இலங்கையில் தற்போதுள்ள பிரதான பிரச்சினைகளின் வரலாற்றுக் காரணங்களைக் கண்டு அறிபவராகவும் அவற்றைத் தீர்க்கும் வழி முறைகளையும் தெரிந்தவராக விளங்குவர்.

இறுதியாக உலக சமாதானத்தின் அவசிய தன்மைகளையும் ஐ நா. சபையின் சிறப்பினையும் அதே வேளை குறைபாடுகளையும் அறிந்தவராகவும் நீடித்த உலக சமாதானத்துக்கு உழைக்க கூடியவராகவும் மனித உரிமைகளை மதிக்க கூடியவராகவும் விளங்குவார்.

★★

உயிர்களுக்குச் சேவை புரிவதிலும் பார்க்கப் பெரிய தருமம் வேறு இல்லை. இந்தத் தருமத்தை அப்பியாசித்தால் ஒருவனுக்கு "உள்ளங்கை நெல்லிக்கனிபோல் முக்தி வந்தெய்தும்."

—சுவாமி விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS
FROM

*

**Rahumathullah Stores**

ARABIC RELIGIOUS & TAMIL BOOK SELLERS

SINNA KINNIYA,
KINNIYA.

*With Best Compliments*
*from*

ANANDA STORES

GENERAL MERCHANTS WHOLESALE & RETAIL
PUTTALAM ROAD, NOCHCHIYAGAMA.
Telephone: 025-7818

BRANCH

***NAWALUXMY TRADERS***

MAIN STREET,
VAVUNIYA.

Telephone: 024-2086

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
from

**Fuji Metal Industries**

No. 186 B 7 Road,
Market Site, Anuradhapura.

WITH THE BEST
COMPLIMENTS
FROM

**FERNANDO OPTICAL**

NEW CHEAPSITE BUILDING
99, MAIN STREET,
ANURADHAPURA.

"SEE GOOD
LOOK BETTER"

பொன்விழா காணும்
அனுராதபுர விவேகானந்தா
த. ப. வி. இற்கு
மனமார்ந்த நல்லாசிகள்.
"மக்கள் பணியே மறையோன் பணி"

**மத்திய தென்னகும்புர**

**வை. எம். எம். ஏ.**

(அரச அங்கீகாரம் பெற்றது)

பிரதான செயல் திட்டங்கள்:
1. அஹதியா கல்வி நிலையங்கள்
2. புலமைப் பரிசில் திட்டம்

**அன்பளிப்புகளும் நன்கொடைகளும்.**

த. பெ. இல. 64
கண்டி.
தொலைபேசி: 08-25703

With Best Compliments
From

**

**Farook Stores**

GRAIN CENTRE
MAIN STREET,
HORAWAPOTHANA.

Telephone: 025-8432



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මා කැමති රැකියාව

(මා කැමති රැකියාව ගුරුවෘත්තියයි)

ලොවපුරා සෑම තරාතිරකම උගතුන් වියතුන් බිහිවෙයි. ඒ ඔවුනොවුන්ගේ දක්ෂකම් මතයි. කුඩාකළ සිටම තිබෙන දක්ෂකම් ක්‍රම ක්‍රමයෙන් වැඩෙමින් ඔවුන් මහා උගතුන් වියතුන් වෙති. ඇත්තෙන්ම ඒ දක්ෂකම් දක්වන්න ඒ සෑම අයෙකුටම අත හිත දෙන්නේ අපහට සිප්සතර කියාදෙන ගුරු මව්වරු — ගුරු පියවරුයයි කීවොත් එය අපට ආඩම්බරයකි.

ගුරු වෘත්තිය තරම් අගනා උසස් වෘත්තියක් නැති තරම්ය. ඒ නිසාමය මා ගුරු වෘත්තියට කැමැති. ලමයෙකුට නිවසේදී ගුරුවරු වන්නේ තම දෙමව්පියන්ය. සෑම ලමයෙක්ම සුමගට යොමු කිරීමේ හැකියාව ගුරුවරයෙකුට ඇත. එපමණක් නොව තමාලද මුළු දැනුමෙන්ම ශිෂ්‍ය - ශිෂ්‍යාවන් දැනුවත් කර සමාජයේ ඉහළ තැනකට ඒමට සිය කාලයෙන් කොටසක්ම කැප කරන්නේ ගුරුවරුන්ය. තම සිසු දරුවන්ගේ යහපත වෙනුවෙන් ගුරුවරයා කොතරම් වෙහෙස මහන්සියක් ගන්නවාද කියා අපට පැහැදිලිව පෙනේ. අද අප වැනි දුප්පත් සිසු දරුවෙකුට හෝ අපගේ මව්පියන්ට හෝ බිය සැකයකින් තොරව සමාජයට ගොස් කථා කළ හැකි තත්ත්වය උදකලේ ගුරුවරයායි.

ගුරුවරයා යම් සිසුවෙක් වැරදි කරනවානම් ඒ ගැන අවවාද කර ඔවදන් දෙයි. නැති බැරි ඉගෙනීමට දක්ෂ ලමයි ඇත්නම් උදව් කරති. තාමගෙන් සිප් සතර උගත් සිසුන්ගේ දක්ෂකම් බලා දෙමව්පියන් හා සමානව සතුටට පත්වෙති.

ගෙයක් සෑදීමට සවි ශක්තිය ඇති මනා අත්තිවාරමක් අවශ්‍යයි. නැතිනම් එම නිවස හරියාකාරව නොපිහිටයි. එමෙන්ම ලමයෙකුට යහපත් දිවියකට දියුණුවේ මාවතකට ඒමට අත්තිවාරම දමන්නේ පාසලේදීය. මෙලෙස බලන කල බාලපරපුරේ අනාගත ශුභ සිද්ධිය තකා යහපත් මාවතකට පැමිණීමට මග පාදා දෙන්නේ ගුරු මව්වරු සහ ගුරු පියවරුන්ය.

ආගම දහම අතින්ද, සංස්කෘතිය අතින්ද ලොව සෑම දෙයක් පිළිබඳවද අපට මනා දැනුමක් ලබා දෙන්නේ ගුරුවරුන්ය. ඇත්තෙන්ම ඔවුන් ලද දැනුම අපට බෙදා දුන්නෝය. එයින් අප ලද දැනුම කවදා හෝ අප වැනිම දූ දරුවන්ට බෙදා දෙන්න ඇත්නම් කොපමණ අගනා දෙයක්ද.

එයට ඇති එකම මග ගුරුවෘත්තියයි. ඒ නිසාය මා මේ අගනා වෘත්තියට කැමැති.

**කේ. එස්. නිර්මලා**
10-වෙනි වසර



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**WITH BEST COMPLIMENTS**

**FROM**

★

# *AKURANA STORES*

**No. 77, PUTTALAM ROAD,**
**NOCHCHIYAGAMA.**

**T'Phone: 025-7805.**

WITH THE BEST COMPLIMENTS

FROM

# SINGAPORE CENTRE

**No. 104, BAZAAR STREET,**
**VAVUNIYA.**

**Dealers in Imitation Jewelleries, Toys**
**Fancy Goods and Gift Items Etc.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பின் சிறப்பு

மற்றைய நாட்களை விட சற்று தாமதமாகவே சுமன் வீட்டையடைந்தான். சுமனைக் கண்ட மீனா ஒன்றுமே பேசாமல் உணவுகளை எடுத்து பரிமாறத் தொடங்கினாள். சுமன் சாப்பிடும் வரை அவன் அருகிலே அமர்ந்திருந்தாள் மீனா இருவரும் எந்த ஒரு கதையும் இன்றி அமைதியாக அமர்ந்து இருந்தார்கள் மீனா தன் கதையை ஆரம்பித்தாள்.

என்னங்க எப்பவும் எந்த ஒரு பொறுப்பும் இல்லாமல் இருந்தால் எப்படிங்க, இரண்டு பிள்ளைகளும் வளர்ந்து விட்டார்கள் அவ்களின் படிப்பு செலவு கூடிக் கொண்டே போகின்றது. நீங்கள் காலையில் போனால் இரவில் தான் வீட்டிற்கு வருவீர்கள் ஏதோ என்னால் இயன்ற அளவு வீட்டு வேலைக்காவது போய் குடும்பத்தை காப்பாற்றுகின்றேன். என கணவனிடம் தன்மையாக எடுத்துச் சொன்னாள்.

ஆனால் அவனோகாதில் ஏதும் விழாதது போல் கைகளை சழுவி விட்டு எழுந்து சென்றுக் கொண்டிருந்தான். மீனா உணவுப் பாத்திரங்களை கழுவியபின் படுக்கைக்கு ஆயத்தமானாள் அதிகாலை பளபள வென விடிந்துக் கொண்டிருந்தது. மீனா எழுந்து. தன் காலை கடன்களை முடித்து விட்டு இரு பிள்ளைகளையும் எழுப்பி பாடசாலைக்கு அனும்பிவைத்து விட்டு கணவனுக்கு வெந்நீர் போத்தலில் தேநீரை ஊத்தி வைத்துவிட்டு அவளின் தொழிலுக்காக பக்கத்து வீட்டிற்கு சென்று விட்டாள்.

சுமன் எழுந்து வெந்நீர் போத்தலில் உள்ள தேநீரை அருந்தி விட்டு உடைகளை மாற்றிக் கொண்டு எங்கோ போய் விட்டான். மீனா தனக்கு கிடைத்த ஐம்பது ரூபாவைக் கொண்டு அன்றைய நாளை கழித்தாள். அவளின் இரு பிள்ளைகளும் பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்து விட்டார்கள். அவர்களுக்கு உணவுகளை பரிமாறி விட்டு கணவன் வருகைக்காக காத்திருந்தாள் ஆனால் அவன் எப்பவும் போல் அன்றும் மதியச்சாப்பாட்டுக்கு வரவில்லை.

மீனாவின் மூத்த மகள் சாந்தி படிப்பில் மிகவும் கெட்டிக்காரி அவளை ஆசிரியர்கள் எப்பவும் போற்றினார்கள், அவளை நன்றாக படிக்கவைக்கும் படி அவளிடம் கூறினார்கள். ஆம் அந்த ஆசை மீனாவிடமும் இருக்கிறது தான். என்ன செய்வது வகுப்பு ஏற ஏற செலவு அதிகரிப்பதால் இவ்வாண்டுடன் அவளின் படிப்பை நிறுத்தவே அவள் எண்ணியிருந்தாள். என்ன செய்வது சுமன் தான் எந்த ஒரு தொழிலும் பார்ப்பதில்லையே எங்கே செலவு என்று யாரிடம் பணம் கேட்பது என மிகவும் வேதனை அடைந்தாள் மீனா.

கடவுளே அவருக்கு நல்ல புத்தியைக் கொடு உழைப்பதற்கு ஆர்வத்தைக் கொடு என கடவுளிடம் வேண்டாத நாளில்லை அதே நேரம் கணவனிடம் தங்களது நிலையை எப்பவும் எடுத்து கூறிக் கொண்டே இருந்தாள் அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் அல்லவா. இரண்டு மூன்று நாட்களாக சுமனின் நடத்தைகளில் சில மாற்றங்கள் தென்பட்டன.

காலையில் நேரத்துடன் எழுந்து இரவில் வீட்டுக்கு நேரத்துடன் வந்து விடுவது என அவன் மாறிக் கொண்டே இருந்தான். அன்று திங்கட் கிழமை சுமன் ஐந்து மணிக்கே எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு உடைகளை மாற்றிக் கொண்டு எங்கோ போவதற்காக புறப்பட்டுக் கொண்டிருந்தான் இதைக் கண்ட மீனா கடவுளுக்கு நன்றிக் கடன் சொல்லி விட்டு கணவன் அருகில் சென்றாள்.

சுமன், மீனா எக்களது மாமாவின் கம்பனியில் கணக்கு பிள்ளை வேலைக்கு ஒரு ஆள் தேடிக் கொண்டிருப்பதாக நேற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் சொன்னார். அந்த வேலைக்கு நான் வருவதாக மாமாவிடம் சொல்லி அனுப்பினேன் அங்கே தான் போக ஆயத்த மாகிக் கொண்டிருக்கிறேன். என கூறி முடித்தான் சுமன். அவனை சந்தோசத்து டன் ஆசிர்வாதம் பண்ணி அனுப்பி வைத் தாள் மீனா.

மாதம் ஒன்று எவ்வாறு கழிந்தது என்றே தெரியவில்லை சுமன் கைநிறைய சம்பளத்துடன் வீட்டை அடைந்தான். மனைவி மீனாவுக்கு சாரி. மகள் சாந்திக்கு பாடசாலை உடை உபகரணங்கள் மகன் சாந்தனுக்கு உடை என வாங்கி வந்திருந் தான். இந்தா என அதை அவளின் கை யில் கொடுத்து விட்டு நீ இனி எந்த ஒரு வீட்டு வேலைக்கும் போகவேண்டாம்.

மகள் சாந்தியின் படிப்பையும் நிறுந்த வேண்டாம் அவளை தொடர்ந்து படிக்க வைக்க வேண்டும் என தன் ஆசையை கூறி முடித்தான். மீனாவுக்கு சந்தோசம் பொறுக்க முடியவில்லை உடனே தன் கணவனின் இரு பாதங்களையும் தோட்டு முத்தம் இட்டாள். ஆண்டுகள் பத்து கழிந்து விட்டன சுமன் மீனா தம்பதிகள் இருவரும் சந்தோசமாக வாழ்ந்துத் கொண் டிருந்தனர்.

ஆம். இன்னும் இரண்டொறு ஆண்டு களில் அவள் நாட்டுக்கு சேவை ஆற்றக் கூடிய ஒரு வேடி டாக்டர்.

**M. A. பௌசுல் ஹினாயா**
ஆண்டு - 10
விவோகானந்தா தமிழ்
மகா வித்தியாலயம்.

*With Best Compliments*
*from*

# K.G.C.

**DEALERS IN BUILDING METERIALS**

**820, MAIN STREET, NOCHCHIYAGAMA.**

**T'Phone: 025-7878**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අනුරාධපුර විවේකානන්ද

දෙමළ මහා විද්‍යාලයේ

ස්වර්ණ ජයන්තිය

වෙනුවෙන්

අපගේ උණුසුම් සුභ පැතුම්

# WIMAL PRINTERS

## විමල් මුද්‍රණාලය

**336 / A 6, බැංකු පෙදෙස, අනුරාධපුර.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments**
**from**

# Venukka Tex

DEALERS TEXTILES
&
FANCY GOODS

**21, Bazaar Street,**
**Vavuniya.**
**T'Phone: 024-2418**

**With Best Compliments**
**From**

# NEW NAJEEM STORES

GENERAL MERCHANTS

**NEW BUILDING**

**VAVUNIYA ROAD,**
**HORAWAPOTHANA.**

**With Best Compliments**
**from**

**

# Gagen Centre

**Wholesalers & Retailers**
**School Requisites, Stationery**
**& Fancy Goods**

**No: 25. Bus Stand,**
**Vavuniya.**

## ஓடர்கள் உடன் கவனிக்கப்படும்

பூசைமணி, பெரியமணி, கிடாரம் திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி பட்டுக் குடை, கும்பத்துக் குரிய செப்பு வகைகள் சருவம் குடம், மெழுகுதிரி ஸ்டேன்ட் பிளவர்வாஸ் ஸ்போட்ஸ் சப் கேடயம் எவர் சில்வர், பித்தளை. செப்பு. அலுமினியம், மற்றும் பெ(1)ன்சி குட்ஸ் வீட்டு அலங்கார பொருட்கள் முதலியன எப்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் எலச்ட்றோ பிளேட்டிங் செய்து கொடுக்கப்படும்.

**ஸம்ஸ் பெலஸ்**

372, பஜார் வீதி வவுனியா.
தொலைபேசி: 024-2408

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளியில்... சில பதிவுகள்.

அன்பு ஜவஹர்ஷா

நெஞ்ச மஞ்சத்தே...
இனிய நினைவுகள்.
இன்னும்—
புனித சுவடுகளாக...
தடம் பதித்துள்ளன.

அந்த நாட்களின்
பசுமை நினைவுகள்...
மன மேடையில்,
நிதமும்—
நர்த்தனம் செய்கின்றன.

ஸ்ரெனிஸ்லொஸ், ஞானராஜா,
ஜேம்ஸ், அருளானந்தம்,
நாகராஜா, நல்லதம்பி,
பசுபதி, வினாசித்தம்பி...
ஆசிரிய பெருந்தகைகளின்
அருந்தொண்டு—
இன்றைய நிலைக்கு...
அத்திவாரமாயின.

நாகராசன், மூர்த்தி,
ராமு, சிவஞானம்,
மனோகரன், இரகுபதி...
நாங்கள் அனைவரும்—
இலட்சியக் கனவுகளுடன்...
இலக்கிய மனதுகளுடன்...
சுற்றிய பொழுதுகள்—
சுந்தரமாய் வருகின்றன.

குலாஸ், மாணிக்கம்,
ரஜனி, ஜெகதீஸ்,
சஹீர், பாக்கியமக்கா
ஆப்தீன் ஆகிய
பள்ளித் தோழர்களின்...
நெருக்கமான பழக்கங்கள்...
நினைவை விட்டு—
நீங்க மறுக்கின்றன.

அந்த வயதுகளில்,
ஒன்றையுமே உணராத...
கற்பனை சுகங்களின்
கண்ணீர் காவியங்கள்...
நனவாகாமல் போயினும்
மனவெளி வீதியில்...
மைல் கல்லாகின.

திருவிழா, இசைவிழா,
கவியரங்கு, நாடகம்,
பொசன் பெருநாள்...
பேதமறியாத
கலாசார மரபுகள்...
கண்ணிய மாய்—
கலந்தன.

இவ்வாறே
மொழியும், மதமும்
இனமும், குலமும்...
நட்பின் கீழே
நடை பயின்றன.

அரியணை சுகத்திற்காக...
சுய நலமிகளின் சூழ்ச்சி—
அப்பாவிகளை அகதிகளாக்கி,
அநுபுரியின் அமைதியை...
அழித்தே விட்டன.

சிதைந்தவை...
கோவிலும், கூடமும்
கல்வியும், கலைகளுமா?
களங்கமில்லாத அன்பும்
கரையில்லாத பாசமும்...
உன்னதமான ஒற்றுமையும்...
இன்னும் எவ்வளவோ.

கடந்த பொழுது
காலம் கடந்தாவது
கட்டாயம் வருமா...?
வரவேண்டும்.

ஈழமாதாவின்...
இதயருமான எம்மூரில்—
எல்லோர் இதயங்களும்,
இனியொருமுறை...
இனிதே இணைதல்வேண்டும்.

மீண்டும் நாங்கள்...
அந்த உறவை—
அதே பிணைப்பை—
காணும் காலம்...
கனவாகக் கூடாது.
நனவாக வேண்டும்
நல் இதயங்களின்
பிரார்த்தனை இது.

With Best Compliments
CENTRAL LOUNGE
KADA 12
BANDARANAYAKA MAWATHA
ANURADHAPURA

*With the Best Compliments*

*from*

# CENTRAL LOUNDRY

**211 KADA 12**

**BANDARANAYAKA MAWATHA,**

**ANURADHAPURA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைதல்

20ம் நூற்றாண்டின் இறுதிக் காலப் பகுதியில் சுகதேகிகளாக அன்றி நோயாளர்களாக மாறவேண்டிய கட்டாயக் கட்டத்தினுள் சிக்கி செய்வதறியாது திண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அன்றைய காலங்களில் அழகிய சூழலை கண்டு மகிழ்ந்த மனித மனங்கள் அவை தம்மால் அச்சுறுத்தக்கூடிய பயங்கர சூழலாக மாறும் என்பதை சிறிதேனும் சிந்திக்கவில்லை.

முதலில் நாம் எடுத்துக்கொள்வோம் சூழல் என்றால் என்ன? அது எவ்வாறு மாசுபடுகின்றது என்பதை அறிதல் வேண்டும். முதலில் சூழல் என்றால் நாம் வசிக்கும் சுற்றாடலே சூழல் எனப்படும். சூழலை இருவகையாகப் பிரிக்கலாம். அவை பௌதிக சூழல், பண்பாட்டுச் சூழல் என பிரிவுகள் உள்ளன. இயற்கை சூழல் என்றால் காற்று, நீர், நிலம், வெப்பம், மழை, வளிமண்டலம் என்பனவாகும். பண்பாட்டுச் சூழல் என்றால் சமயம், அவை படைத்த படைப்புக்கள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், கட்டிடங்கள், வீதிகள், பாடசாலைகள், ஒழுக்கங்கள் என்பனவாகும்.

மனிதன் தன் வாழ்க்கை ஒன்றை தமக்கு ஏற்ற விதத்தில் அமைத்துக்கொள்கின்றான் முதலில் மனிதன் கால் நடையாக பயணம் செய்து வந்தான், பின்பு காலம் செல்லச் செல்ல அவனுடைய அறிவு வளர்ச்சிக்காரணமாக அவன் மாட்டு வண்டியில் பயணம் செய்கின்றான். பின்னர் அவனின் தொழில் நுட்ப அறிவின் காரணமாக தற்போது வாகனங்களில் பிரயாணம் செய்கின்றான் தொழில் நுட்ப அறிவிற்கு முதல் மனிதன் வயல் வேலைகளையும், உனவு பொருளாதார பொருட்களையும் தனது தேவைக் ஏற்ற விதத்தில் தானே முயற்சித்து தமது தேவைகளை நிறைவேற்றுகின்றான். பின்னர் அவனின் வளர்ச்சியும், அறிவும் காரணமாக எல்லாமே மிக வேகமாகி இயந்திர முறையை பயன்படுத்தி வந்தான். அது மனிதனுக்கு இலகுவான முறையாக இருந்தாலும் அவை அனைத்துமே சூழலை அசுத்தப்படுத்துபவையாகும்.

இனி நாம் வசிக்கும் நிலத்தை எடுத்துக்கொண்டால் அவை எவ்வாறு மாசடைகின்றது. என்பதை அறிந்திருத்தல் வேண்டும். மனிதன் தனது தேவைக்கேற்ற முறையில் நிலத்தை பயன்படுத்துவதால் நிலம் சீர்கெட்டுப் போகின்றது. இதுவும் சூழலை அசுத்தப்படுத்து பவையாகும். மனிதன் தன் பயிர்ச்செய்கை நன்றாக செழிப்பாக வளர்வதற்காக பூச்சிக் கொள்ளிகள், களைக் கொல்லிகள் என்பவற்றை பயிர்களுக்குத் தெளிக்கின்றான். இதில் குடிகொண்டிருக்கும் பூச்சி, பிராணிகள் இறந்து நிலத்தில் படிவதனால் சூழல் மாசடைகிறது. அதுமட்டுமன்றி இன்னும் சில உள்ளன. அவை மனிதன் பயிர்களுக்கு தெளித்த இரசாயனப் பதார்த்தங்கள் நிலத்தில் படிவதனாலும் சூழல் அசுத்தமடைகின்றது. பயிர்களை உண்ண வரும் மிருகங்கள் அப்பயிர்களை உண்டு இறப்பதைக் காண்கின்றோம். அவ்விறந்த மிருகங்கள் அழுகி கழிவுகளாக நிலத்தில் படிந்திருப்பதனாலும் சூழல் மாசடைகின்றது.

அடுத்ததாக நாம் நீரை எடுத்துக் கொண்டால். நீர் எவ்வாறு மாசடைகின்றது என்றால் குப்பைக் கூலங்களை குளத்துக்கருகிலும், ஆற்றுக்கருகிலும் போடுவதால் நீர் மாசடைகின்றது அவ்வாறு அங்கு போடும் குப்பைகள் ஆற்று நீரிலும் குளத்து நீரிலும் கலந்து அசுத்தமான நீராக கடலில் வந்து கலக்கின்றது. இதனால் கூட நீர் அசுத்தமடைகின்றது. அவ்வடைந்த நீரையே மனிதர்களாகிய நாங்கள் அருந்தும் போது எமக்கு உடலில் பல நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் எமக்குப் பல பயங்கரமான நோய்கள் ஏற்படலாம். இதனாலும் சூழல் மாசடைகின்றது.

நாம் இலகுவான முறையாக போக்குவரத்து வசதிகள் அமைந்தாலும் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் சூழலை அசுத்தப்படுத்துபவையா கும். ஏன் என்றால் அவ்வாகனங்களில் இருந்து வெளியேறும் புகைகள் காரண மாகவும், அதன் இரைச்சல்கள் காரணமாக வும் சூழல் அசுத்தமடைகின்றன. இதனால் அவ்வீதியோரங்களில் செல்லும் மனிதர்கள் அவ்வளியை சுவாசிப்பதனால் மனிதர் களுக்கு இருதய நோய், தொண்டை நோய் போன்ற நோய்களும் மனிதர்களுக்கு ஏற் படுவதனாலும் பல தொழிற்சாலை இரை சல்கள், இசைக்கருவிகளின் இரைச்சல்களி னாலும் சூழல் மாசடைகின்றது.

வேறு சில அணுவாயுதங்கள் யுத்தங் களின் போது பாவிக்கப்படுகின்றன இத னால், பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்கின்றனர். இதனால் அவ்விறந்த மனிதர்களினாலும் சூழல் மாசடைகின் றது. அதுமட்டும் அல்ல அவ்விறந்த மனி தர்களின் துர்நாற்றங்கள் வளியுடன் கலந்து வளியையும் அசுத்தப்படுகின்றது.

இனி நாம் தொழில் சாலைகள் எவ் வாறு மாசுபடுகின்றது என்று அவதானித் தால் அத்தொழிற் சாலையில் இருந்து வெளியேறும் கழிவுகளை கிடங்கொன்று வெட்டி கழிவுகளைப் புதைத்தல் இல்லா விட்டால் குப்பைகளை கூட்டி அள்ளி ஒரு கிடங்கில் இடல் வேண்டும். அவ்வாறு அங்கு இருக்கும் மனிதர்கள் கண்காணிப்பதில்லை. என்றபடியினால் அக்குப்பைகள் நிலத்தில் படிந்து நிலத்தையும் அசுத்தப்படுத்துவ தோடு தொழிற்சாலையும் அசுத்தமாகின் றன. அதுமட்டும் இன்றி இன்னும் எவ் வளவோ சூழலை அசுத்தப்படுத்துவன உள்ளன.

2ம் உலகப் போரின் போது யப்பானில் ஹிரோசிமா நாகசாகி ஆகிய பகுதிகளில் குண்டு வீசப்பட்டு பல நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்து விட்டனர். அதனால் அப்பிரதேசம் முழுவதிலும் உள்ள மக்கள் அதிர்வுக்குள்ளாகி பலர் வைத்தியசாலையி லும், சுகாதார மருத்துவ மனைகளிலும் சிகிச்சைப் பெற்று வந்தனர். இதனாலும் சூழல் மாசடைந்தது அவ்யுத்தத்தில் பாவிக்கப்பட்ட வெடிமருந்துகள் கூட நிலத்தை அடைந்து இன்று கூட அவை நிலத்தை மாசடையச் செய்கின்றது. இத னாலும் பல கெடுதிகள் ஏற்பட்டு சூழல் மாசடைகின்றது.

நாம் காணுகின்றோம் எத்தனையோ பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சி போன்ற வற்றிலும் சூழல் மாசடைதலை தடுத்தல் வழி முறைகள் எல்லாம் நாம் பார்க்கின் றோம். காணுகின்றோம். அவை அனைத் துமே சூழலை நல்ல முறையில் பேணிக் காக்கும் முறைகள் ஆகும். அவை அனைத் தையுமே நாம் ஒழுங்கான முறையில் பார்த்தும், கேட்டும், அறிந்தும் ஓர் முறை யில் பாதுகாத்து வந்தால் அச்சூழல் ஒரு நாளும் மாசடையாதிருக்கும்.

ஆனால் மனிதன் தன் முயற்சியால் எவ் வளவோ கருமங்களை செய்து வந்தாலும் அவை அனைத்தும் மனிதர்களுக்கு இலகு வான முறையாக இருந்தாலும் அவை அனைத்தும் சூழலை மாசடையச்செய்ப வையாகும். "சுத்தம் சுகம் தரும்" "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது சான்றோர் வாக்குகளாகும். ஆகவே மாணவர்களாகிய நாம் நமது வீடு, பாடசாலை சூழல் ஆகியவற்றைச் சுத்த மாக வைத்திருந்தால் நாம் வாழும் தேச மும் நலமடையும் என்பதில் ஐயமில்லை. நமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வுக்கு எமது வழிகாட்டிகள் அவசியம். எனவே சூழலை மாசடையாது பேணிப் பாதுகாக் கும் பொறுப்பு எம்மையே சாரும்.

ஐ. பறூஷா
ஆண்டு-11.
வி. த. ம. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

**JEMINTHAJ**
**TEX & TAILORS**

(LADIES AND GENTS TAILORING)

**No. 402, B**
**BANDARANAYAKA MAWATHA.**
**ANURADHAPURA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**WITH BEST COMPLIMENTS**

**FROM**

★

# A. ONE JEWELLERS

**HAMEED BUILDING**

**55/5, Market Site, Anuradha Pura.**

**T'Phone: 025-2971**

*With Best Compliments*

*from*

# HOTEL DE SHARFAN

**No. 86 MAIN STREET,**

**ANURADHAPURA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மம் தலைகாக்கும்

அந்நகரமே இருளின் கருமையில் இனிதாய் உறங்கிக்கொண்டிருந்தது. எங்கும் நிசப்தம், வீடுகள் கருப்புக் கம்பளமாக போர்க்கப்பட்டிருந்தன வீதியோர இரு மருங்கிலும் நடப்பட்டிருந்த மின் கம்பங்களிலிருந்து மின் விளக்குகளின் மெல்லிய ஒளிபட்டு சிற்சில இடங்களும், மரங்களும் தம் இயற்கை நிறத்தைப்பெற்று கருமையின் பிடியில் நிற்கும் ஏனையவைகளைப் பார்த்து இறுமாப்படைகின்றன.

அது ஒரு பெரிய பிரத்தியோக வைத்தியசாலை மின் விளக்குகளின் மெல்லிய வெளிச்சத்தினால் பிரகாசமடைந்திருக்கிறது நடேசன் கட்டிலில் படுத்திருந்தவராக சிந்தனை வயப்பட்டிருக்கிறார் அவர்கண்கள் கூரைமுகட்டை நோக்கி நிலைகுத்தி நிற்கின்றன. ஆனந்த் நீயொரு தெய்வம் நீயொரு தெய்வம் என அவர் வாய் அவரை அறியாமலேயே முணுமுணுக்கின்றது. மாலா நீயொரு பாக்கியவதியம்மா இல்லாட்டி ஒரு உத்தமன் செல்வந்தனான ஒருவனோடு வாழ உனக்கு கொடுத்துவைத்திருக்குமோ? அவர் விம்முகின்றார். அவர் மனம் கடந்தகாலத்தை நிகழ்காலமாக்குகின்றது. ஆம் நடேசன் முதலாளி என்றாலே நாடே அறியும் அந்த அளவுக்கு பேரும், புகழும், பணமும் நிறைந்தவராக காணப்பட்டார். நடேசன் பெரும் கம்பனிகளின் உரிமையாளராய் இருந்த அவரிடம் இறுமாப்போ, பெறுமையோ, கர்வமோ ஒரு துளியேனும் இருக்கவில்லை பெரும் செல்வந்தராய் பிறந்துவிட்டால் சர்வாதிகாரி போல் செயல்படும் தற்கால மனிதர்களிடமிருந்து மிகவும் வேறுபட்டவராய் இருந்தார் நடேசன் முதலாளி தன்கையை நாடி வருவோருக்கு இல்லை என்று சொல்லாமல் ஈர்ந்தளிப்பதில் வள்ளர் அவர். வேலைதேடி அலையும் படித்த இளைஞர்களுக்கு தன் நிறுவனத்தில் வேலைபோட்டு கொடுப்பார். அத்தோடுமட்டும் நில்லாது அவர்களின் குறை நிறைகளை கேட்டறிந்து அவற்றிக்கு தக்கபடி பரிகாரம் காண்பார். நண்பர், உறவினர் என்று அவர்களுக்கு மாத்திரம் விஷேச கவனிப்பு அவரிடம் கிடையாது எவன் நல்லவன், எவன் தீயவன், என பாகுபடுத்தி அறியும் பண்பு அவருடையது. இதனாலே என்னவோ இறைவனது அருள் பார்வையும் அவருக்கு கிடைத்து நாள் தோறும் தன் தொழில் முயற்சியில் வெற்றிகண்டார். இதனால் அவருக்கு நல்ல நண்பர்கள் பலர் சேர்ந்தாலும் தீய நண்பர்கள் பலர் விரோதியாய் மாறியவர்களும் இருந்தார்கள்.

அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்களுக்கான தன்னால் இயன்ற தொகையை வாரி வழங்குவார். வரிய குடும்பங்களில் பிறந்த இளம் பெண்கள் பலருக்கு தன் செலவில் திருமணம் செய்து வைத்தார். ஊனமுற்றோர் நிதியத்திற்கு பல்லாயிரம் ரூபாய்கள் வழங்குவார் அவர் பேர் சொல்லாத வாய்கள் இல்லை. இவ்வாறு இருக்கும் வேளையில் தான் விதியின் திரு விளையாடல் ஆரம்பமாகியது ஆம்! நல்லவர்களுக்கு இறைவன் ஏதாவதொரு வகையில் சோதனையை கொடுப்பது இயற்கை தானே. அவ்வாறே அவர்வாழ்வும் சோதனையின் தலைவாயிலில் தடம் பதிக்கத் தொடங்கியது.

ஒரு முறை அவரது நிறுவனத்தில் கணக்காளராய் பணி புரிந்து தினேஷ் என்பவன் கள்ளக் க/கு எழுதவே இதை அறிந்த நடேசன் முதலாளி மற்ற ஊழியர்களுக்கும் இதுபாடமாக அமையட்டும் என்ற நோக்கில் எல்லோர் முன்னிலையிலும் தவறை சுட்டிககாட்டி வேலையிலும் இருந்து நீக்கிவிட்டார், அன்றிலிருந்தே தினேஷ் முதலாளி மேல் பகையை நாளுக்கு நாள் வளர்க்கக் கொண்டே சென்றான். இவன் தன்னுடன் சில ஸஹாக்களையும் சேர்த்தக் கொண்டு நடேசன் முதலாளியின் நிறுவனத்தில் பல உற்பத்திகளில் கலப்படம் செய்ய ஆரம்பித்தனர் இதனால் மக்கள் அவர் மீது வைத்திருதந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை குறைவடையும் சில பேர் இறக்கவும் வழிவகுத்தது. இதனால் மக்களின் வேண்டுகோளின் பேரில் நிறுவனம் மூடப்பட்டதும் அவரது வாழ்க்கையில் துன்பமும் துயரும் குடி கொள்ளவே இதைக் கண்ட அவர் மனைவி பார்வதியும் இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்தார். தமது சொத்துகள் அனைத்தையும் இழந்து தன் ஒரேமகள் மாலாவுடன் நடு வீதியில் தள்ளப்பட்டார் மாலாவை மகளிர் மடமொன்றில் சேர்த்து விட்டு தான் கூலி வேலை செய்து அன்றைய பொழுதுகளை கழித்தார். அன்று முதலாலி என்று அழைக்கப்பட்டவர் இன்று பிச்சைக்காரன் என்று அழைக்கப்படுகின்றார்.

ஆம் அன்று பிச்சை எடுத்துக் கொண்டு வரும் வழியில் மயக்கம் போட்டு கீழே விழுந்து விட்டார். கண் விழித்துப் பார்த்த போது புன்னகை தவழும் முகத்துடன் அவர் முன் ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான் இதைக் கண்ட நடேசன் முதலாளி தப்பி யாரப்பா நீ? நான் எப்படி இங்கு வந்தேன் என பல கேள்விகளைக் கேட்டவாறு படுக்கையை விட்டு எழ முயன்ற போது அவன் அவரை தடுத்தி என்னை தெரியலயா முதலாளி நான் ஆனந்த். அன்றொரு நாள் நான் வேலை தேடி வரும்போது எனக்கு வேலையும் தந்து மேல் படிப்பை மேற் கொள்ள உதவியையும் செய்தீர்களே அதன்பயனால் நான் நல்லா இருக்கன் நேற்றுதான் நான் வெளியூரில் இருந்து வரும் வலியில் உங்களை பாதையோரத்தில் விழுந்திருப்பதைக் கண்டேன். அதன் பின் இந்த பிறைவட் நேஸிங்ஹோம்ல சேர்த்தேன். நான் உங்கதயவால நல்லா இருக்கன் ஆனா நீங்கள் இந்த நிலைமையில் இருப்பீங்க என்று கனவிலும் நினைக்கல்ல என்று கூறிய ஆனந்தனின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுக்க பாய்ந்தது நடேசன் முதலாளியின் கைகளைப் பற்றிய ஆனந்தன் இனி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை உங்களையும் மகள் மாலாவையும் கண் கலங்கமாக பாதுகாக்கிறது என்னோட பொறுப்பு இவ்வாறு கூறி விட்டு விடைப் பெற்ற ஆனந்தனை வெற்றிப் புன்னகையோடு பார்க்கிறார் நடேசன் முதலாளி அப்போது அச்சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற் போல "தர்மம் தலைகாக்கும் தக்க சமயத்தில உயிர்காக்கும்" என்ற தத்துவப்பாடல் அவ்விருவரனதும் செவிகளில் சிங்கார மிடுகின்றது.

ஆக்கம்:-

S. H. Siyana Begum
Year - 11
V. T. M. V.
A/Pura

ஆத்மீக ஞானத்திலே ஒரு மக்சட் கூட்டத்தினர் அல்லது ஒரு தேசத்தார் எவ்வளவு முற்பட்டிருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் நாகரிகம் உள்ளவர்களாகக் கருதப்படுவார்கள். பல தரப்பட்ட இயந்திரங்களையும் அவைபோன்ற பிறவற்றையும் ஆக்கி, அதனால் லௌகீக வாழ்க்கைக்கும் வேண்டிய வசதிகளைப் பெருக்கிக்கொண்ட காரணத்தினால எந்தத் தேசத்தாரையும் நாகரிகம் படைத்தவர்கள் என்று சொல்லக் கூடாது.

—சுவாமி விவேகானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

GLOBE TRADERS
& GROCERIES

General Merchants
&
Distributors for
Kandos Chocolates Horlicks,
C. T C. M. D. Jam & Cordials,
Nips Biscuits, Delta Toffees,
Uswatta Glucorasa Etc.
19, Bazaar Street,
Vavuniya.
Tele : 024-2345

With Best Compliments
from

IMRAAS CENTRE

DEALERS IN
IMITATION JEWELLERIES
Toys. Fancy Goods
GIFT ITEMS &
SCHOOL STATIONERY
100, Bazaar Street,
Vavuniya.
Tele : 024-2454.

With Best Compliments

from

★ ★

A. K. SHANMUGAM 'N'
SONS

61, Model Market,
Vavuniya.
Tele : 024-2015.

With Best Compliments
from

□ □

Beauty Spot

A-76, Modern Market,
Vavuniya.

Tele : 024-2433.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பிறப்பின் மேன்மை

செல்வி. D. சனூஜா பேகம்
ஆண்டு 11

ஓ மனிதா
நீ பெரும் சிந்தனையாளனாம்
எதனையும் பகுத்து அறியக்கூடியவனாம்
உன் அறிவின் மொத்த உருவம்
மூன்று இறாத்தல் மூளையில் இருப்பது தெரிகிறது.

மூளைக்கு வேலை கொடுக்காமல்
மண்டையோட்டை துருபிடிக்க வைத்து
மாமிச வாடையை நோக்கி
இழுப்பட்டுச் செல்லும் மிருகமாகிவிடாதே.

பசி வந்த போது புசித்துவிடு
எனினும் இரை தேடித்தவமிருக்கும்
கொக்காகாதே.

உன் அறிவுப் பசிக்குத் தீனிபோடு
தினமும் அறிவு வேட்கை
கொண்டு அலை நான் ஏன்
பிறந்தேன் என்று நினை.

உணக்கு கொலை வெறி கொண்டு அலையும் கொடூர
மிருகங்களின் உறுமல்சத்தம்
கேட்கின்றதா?

அவற்றை கொண்டு நீ யோசி
அவை பசித்த போது உண்கின்றன
உறக்கம் வரும் போது படுக்கின்றன
பிடுங்குகின்றன நடுவதில்லை
செலவழிக்கின்றன சேமிப்பதில்லை.

இப்போது நீ உன்னை மேன்மைப்படுத்து
ஓ நான் மேன்மையானவன் என
வாயால் மொழிந்து உள்ளத்தால்
செயற்படு.

உன் பிம்பத்தை கண்ணாடி
முன் காட்டு உன்னைப்பார்த்து
நீயே அதிர்ந்து போவாய்
எவ்வளவு அழகாய் நேர்த்தியாய்
படைக்கப்படடிருக்கிறேன்
என பெருமைப்பட்டுக்கொள்வாய்.

உண்ணால் தான் எத்தனை
அழகான முத்தான அறிவுரைகளை
சொத்தாய் சொல்லமுடிகிறது
இவற்றிலிருந்து தெரிகிறதா மனிதா
உன் பிறபபின் மேன்மையினை.

இன்றிலிருந்து இனியவனாய்
மாறிவிடு. மாமிசக் கலவையை
மணடையில் சுமக்கும் மனிதம்
அற்ற மிருகமாய் மட்டும் ஆகிவிடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பாதையில் இலங்கை

இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டில் இலங்கையானது அபிவிருத்திப் பாதையில் முன்னேறிக் கொண்டு செல்கின்றது எனலாம். இலங்கையானது அண்மைக் காலமாக அதாவது 1976ம் ஆண்டிலிருந்து நாட்டின் அபிவிருத்தியின் வளர்ச்சிப் படிகளில் அதிகளவு வளர்ச்சியைப் பெற்று வருகின்றது என்றால் மிகையாகாது, இலங்கையில் போக்குவரத்து, வேலை வாய்ப்பு, கல்வி, தொடர்பாடல், முதலீடுகள் போன்ற வற்றில் அபிவிருத்தியடைந்து செல்கிறது எனலாம்.

இலங்கையானது வெளிநாட்டவரின் முதலீடுகளை ஊக்குவிப்பதன் காரணமாக முதன் முதலில் 1978ம் ஆண்டில் கட்டுநாயக்கவில் சுதந்திர வர்த்தக வலயத்தை ஆரம்பித்து வைத்தது இதில் 72 தொழில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டதுடன் 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இரண்டாவது சுதந்திர வர்த்தக வலயமானது 1986ம் ஆண்டில் பியகம எனுமிடத்தில் திறந்து வைக்கப்பட்டது இதில் 28 தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 16 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பையும் அளித்துள்ளது. மூன்றாவதாக காலி மாவட்டத்தில் அமைந்துள்ள கொக்கலை எனுமிடத்தில் 1991ம் ஆண்டு 9 தொழில் முயற்சிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட 1800 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. நான்காவது சுதந்திர வர்த்தக வலயமானது குருநாகல் மாவட்டத்தில் ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இந்த சுதந்திர வர்த்தக வலயத்தை அமைப்பதன் காரணமாக அந்நிய செலாவணியைப் பெற முடிவதுடன் நவீன தொழில் நுட்பத்தையும், வெளிநாட்டு மூலதனத்தையும் பேற்றுக்கொள்ள வழி கோலுகிறது.

அண்மைக் காலங்களில் 200 ஆடைத் தொழிற்சாலைத் திட்டத்தின் கீழ் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்பை அளித்துள்ளது. இதனால் தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதி வீதம் கூடுதல் பலனை அளித்துள்ளது. மேலும் சிறிய நடுத்தர கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கென அரசினால் அடிப்படை வசதி செய்து கொடுக்கப்பட்டு மேற்கொள்ளப் படுகின்ற உற்பத்தி முயற்சிகளைக் கொண்ட வரையறுக்கப்பட்ட பிரதேசத்தையே கைத்தொழில் போட்டை எனப்படுகிறது. கைத் தொழில் அபிவிருத்திச் சபையினால் (I. D. B.) நிர்வகிக்கப்படுகிறது, இது உள்நாட்டு முதலீடுகளை கொண்டதாகவும், மூல வளங்களைக் கொண்டதாகவும் உள் நாட்டு சந்தை வாய்ப்பைக் கொண்டதாகவும், கைத்தொழில் முயற்சியாகவும் காணப்படுகிறது. வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகின்றது.

இலங்கை முதலீட்டுச் சபை நாடெங்கிலுமுள்ள 22 மாவட்டத்திலும் 1272 வெளிநாட்டு முதலீட்டுத் திட்டத்தையும், உள் நாட்டு முதலீட்டுத் திட்டத்தையும் அங்கீகரித்து ஏறக்குறைய 286 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பையும் தேடிக் கொடுத்துள்ளது. இதனால் முன்னைய ஆண்டுகளை விட வேலையற்றோரின் வீதம் 1992ல் 21 வீதமாகக் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

புதிய கிராமங்களை நகரங்களாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கிராம எழுச்சித் திட்டம் (கம் உதாவ) முதன் முதலாக யாப்பஹுவ எனுமிடத்தில் 1979ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது இது ஒவ்வொரு வருடமும் நடைபெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் குடியேற்றத் திட்டம், போன்றன அடங்குகின்றது. இதனால் நாட்டிலுள்ள பல்லாயிரக் கணக்கான வதிவிடமற்ற மக்களுக்கு வசிக்க வீடுகளும் பல சுகாதார வசதிகளும், நன்மைகளும் அதிகமாகக் கிடைக்கின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் நடைபெறும் மிக முக்கியமான 'எக்ஸ்போ' கண்காட்சி 1992ல் இலங்கையில் நடைபெற்றது. எந்த ஒரு நாடும் தனது உற்பத்திகளுக்கு உலக சந்தையைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதே 'எக்ஸ்போ' கண் காட்சியின் நோக்கமாகும். இதன் காரணமாக "உமக்கும் தேசத்துக்கும் ஏற்றுமதிகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தும்" என்ற வாசகத்துடன் இலங்கையில் நடைபெற்றது. 1992ம் ஆண்டு இலங்கை ஏற்றுமதி வருடமாக பிரகடனப் படுத்தந் பட்டிருப்பதுடன் எதிர்வரும் ஒரு சகாப்த காலத்தை ஏற்றுமதி சகாப்தமாகவும் அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

இலங்கையில் 1991ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட உலக வர்த்தக நிலையம் இலங்கையின் சர்வதேச வியாபாரத்தின் வளர்ச்சிப் படியின் முக்கியமான ஓர் திருப்புமுனையாக அமைகின்றது. கொழும்புக் கோட்டையில் உள்ள சரித்திரப் புகழ் பெற்ற 'ற்றான்ஸ் வேர்க் கவுஸ்' இப்போது உலக வர்த்தக கேந்திர நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் போக்குவரத்து சபையானது அண்மைக் காலத்தில் மக்கள் மயப் படுத்தப்பட்டுள்ளது. மக்கள் மயப்படுத்துவதால் நவீன தொழில் நுட்ப அபிவிருத்தியைப் பெற முடியும். வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்துக் கொள்ள முடியும். ஊழியர்களின் வருமானத்தை உயர்த்திக் கொள்ள முடிகிறது. இலங்கையின் தலா வருமானமானது முன்னர் 350 அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. இது தற்போது 418 அமெரிக்க டொலர் என மதிப் பிடப்பட்டுள்ளது. உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு தனியாருக்கு அனுமதியளித்துள்ளது. புதிய விமானத்தைக் கொள்வனவு செய்து சேவையிலீடுபடுத்துயுள்ளது. மேலும் எயார் லங்கா லிமிட்டெட்டை (AIR LANKA LTD) உருவாக்கி வெளிநாட்டு விமான சேவையிலீடுபட அனுமதியளித்துள்ளது.

தென்னாசியாவிலே முதன் முதலாக இலங்கையின் தனியார் துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்பாடல் சேவை செலுலர் தொடர்பாடல் (CELLULAR COMMUNICATION) ஆகும். லங்கா செலுலர் எனும் லிமிட்டெட்டால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு அசையும் தொலை பேசி ஆகும்.

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய தொலைபேசி அழைப்பு பேஃபோன் அட்டை (LANKA PAYPHONE CARD) ஆகும் இது லங்கா பேஃபோன் லிமிட்டெட் (LANKA PAYPHONE LTD) எனும் கம்பனியால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது இவ்வட்டையின் உதவியுடன் பணக் கொடுப்பனவு இடம் பெறாமலே தெலைபேசி அழைப்பைப் பெற முடியும்.

அடுத்து பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்கி இருப்பதுடன் பல புதிய பாடசாலைகளையும் திறந்து வைத்துள்ளது. மேலும் பாடசாலைக்கான வசதிகளையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு இலவச பாடப் புத்தகம், மதியபோசன உணவு முத்திரை, இலவச சீருடை போன்றவற்றையும் வழங்கியுள்ளது. இதனால் 1990ம் ஆண்டில் இருந்த இலங்கையின் கல்வி அறிவு 84 வீதமானது அண்மையில் 90 வீதத்தைத் தாண்டியுள்ளது.

இலங்கை தொழில்நுட்ப முறை உற்பத்தி போன்றவற்றில் கூடுதல் அக்கறை செலுத்துகிறது போக்குவரத்து வசதிகளுக்குத் தேவைப்படும் பஸ் வகைகளின் உதிரிப் பாகம் தயாரிக்கும் நிறுவனத்தை நிறுவியுள்ளது. தற்போது DIMO போன்ற பஸ்கள் இலங்கையில் தயாரிக்கப்படுகிறது.

நீர் வழங்கல், துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம், நெற்பயிர்ச் செய்கை போன்றன சென்ற வருடங்களில் போலல்லாது கூடுதல் வளர்ச்சியை எய்தியுள்ளது. இவற்றால் இலங்கை அபிவிருத்தியில் கூடுதல் பங்களிப்பை வழங்கியுள்ளது எனலாம்.

M. J. ஜுமான்
ஆண்டு 12,
வர்த்தகப் பிரிவு,
அ. வி. த. ம. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

**NEW NABISHA CYCLE WORK SHOP**

**SALES & REPAIRS**
**BICYCLE & BICYCLE PARTS**

**No. 139, MAIN STREET.**
**ANURADHAPURA.**
**Tele Phone: 025-5563**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මගින් පිටකරන දුම්ද මේ ගනයටම වැටේ. කර්මාන්තශාලා වල තවත් අප ද්‍රව්‍යය ජලාශවලට එක්කිරීම නිසා මත්ස්‍ය සම්පත වැනසී යාමද ජලය දූෂණය වීමද නිතර අසන්න දකින්නට ඇත.

අප පරිසරය සුරැකීමට ගත යුතු පිළිවෙත් ගැන මදක් සිතා බලමු. වනාන්තර හෙළි කිරීම අවම කිරීම හා එළිකරන ප්‍රමාණයට වනවගා ඇති කිරීම. අනිවාර්ය රක්ෂිත වනාන්තර බිහි කිරීම පොලිතින් ප්ලාස්ටික් වැනි ද්‍රව්‍යය භාවිතය අඩුකර පරිසරයේදී දිරාපත්වන ද්‍රව්‍යය ඊට ආදේශ කිරීම. කෘශිරසායන භාවිතය අවමකර ස්වභාවික පොහොර හා ජෛව පාලන ක්‍රම ගොවීන්ට හඳුන්වා දීමත් ඔවුන් කෘශිරසායන භාවිතය ගැන දැනුවත් කිරීම මගින් පසේ ව්‍යුහය වැඩි කරවීම. කර්මාන්තශාලා සඳහා සුදුසු පාලන ක්‍රමවේදයක් ඇති කිරීම, වැනි ක්‍රියා මාර්ග ගත යුතුව ඇත.

අවසාන වශයෙන් දැනට මේ පවතින පරිසර තත්වය අවම වශයෙන් මෙම තත්වයෙන් වත් අප ඉදිරි පරපුරට දායාද කළ යුතුය. එය අපගේ වගකීමක් මෙන්ම අපගේ උත්සාහයද විය යුතුමය.

**ඩී. මොහමඩ් රිසාන්**
වසර-12.

*With Best Compliments*

*from*

**LUCKY GRAIN CENTRE**

**179, MARKET SITE,**
**ANURADHAPURA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Jubilee Celebration of My School

Celebrating the golden Jubilee is a colourful event in the history of my school. My alma-mater is Vivekanandha Tamil Maha Vidyalaya, which is one of the illustrious Educational Institutions in the Anuradhapura District. It is indeed a great privilage bestowed upon me to write some-thing about My School.

This School which was started in a very humble way, it is heartening to note, leads its way to glory. The foundation stone was laid by a person none other than suwamy Vivekanandha who in 1894 broke journey in Sri Lanka on his way to his mother land after attending the International Religious confrence held in Chicago-North America. We were lucky that he visited this ancient city during his so journ and was a graceful enough to devote a little of his precious time to lay the foundation of this school. The unique function was organised by few prominent citizens of this town whose genuine intention to have seperate school for the Tamil speaking people became a reality later. As soon as the foundation was laid, they didnot spare any time to build up the school within the premises of Sri Kadiresan temple that was situated very closed to the Botree temple. The school was named in memory of Suwamy Vivekanandha and this Vivekanandha school was born. M/s Ramasamy, Sivakolundhu and Natarajah, eminent lawyers from the Anuradhapura bar at that time and Mr. Srittamplam a leading business magnet of the town in association with other social workers worked for the development and growth of the school.

When we recall the past memories, we could find how My Alma-Mater overcame the challanges it had to face on her way to progress she took "Dedication and devotion" as her motto and walked on her holy pilgrimage towords the goal.

Mr Arulampalam Tamil scholar and Pandit became the first princpal of the school. Although he administered the school with a few other teachers. It is purely a one man show, for some time. His simple and unassuming ways of life, the love and kindness shown to students and the timely action taken for the development of the school won the hearts of all and brought distinction to the school. He was succeeded by Mr. Navarathnam. During his time, he was promoted as a Government school and more halls of studies were built. Thereafter Mr Jaganathan a London Graduate was appointed to hold the rains of the school. With his appointment, a golden era had downed where this school was concerned. The school was brought to the new town under Anuradhapura 1/4 reservation scheme. That helped Mr. Jaganathan to do wonders. A very high standard of education was achieved. Descipline was maintained in its true spirit.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The roll of students rose many folds, exeeding 600 and the staff was increased to 20. With that the school was again promoted to that, starts of a Maha Vidyalaya, Mr. Jaganathan's wife. Mrs. Sakunthala Jaganathan, daughter of proctor Natarajah a Father helped her husband in numerous ways for the unpreeendented growth and development. After Mr. Jaganathan Mr. Gananathappillai and Mr. Ratnasingam. took the office as Principals. Then the communal disturbances broke out and with that the school was neglected for some time and it was defunct during that period. That was the dark period in the history of our school. However it was soon reopened with the available students and Mr. Junaideen an old student was appointed as Principal to shoulder the burden of rebuilding and resuciating the school. Wich has been carried out marvelously well, untill to-day.

According to available statisticts there were 6000 students who had passed out of our school, simplicity discipline devotion and dedication are some of the noble straits they had learnt from this school. Wherever they go, I am sure they carry this humble massage. My-Alma mater has provided the country with doctors, lawyers. teachers clerical officers and soldiers who serve in every nook out andcorner ofthe country and safe-guard the sacred name of Vivekanandha. Our school students have not only proved their telents in studies but also in Sports and other extra carry-cular activities Recently we were given a musical band too. An auditorium in an attractive building and a large play ground are two of the latest sadditions that dorn our school now.

The Golden Jubilee celebration falls on this year. Elaborate arrang ments are being made to celebrate this occasion in a fitting manner. The Principal, the staffs, old boys, well-wishers and others are very enthusiastic and have contributed their best for the success of this occasion. Already we have had the Marathon Race, the cycle race, which form some of the Main events of the celebration.

I wish the Golden Jubilee celebration would become a memorable event not only in the life of the school but also in the life of every member of the tamil speacking community of Anuradhapura District.

**by: J. Mohamed Halith**
Year-9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றைய நிழலில்
# இன்றைய விவேகானந்த வித்தியாலயம்

பண்டைய இராசதானி இராசரட்டையின் தலை நகர் அநுராதபுரி, அதன் சிகரம் எமது விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயம். இவ்வித்தியாலயம் பொன் விழாக் கொண்டாடும் இவ்வரிய வேளையில் வித்தியாலயத்தின் உண்மை நிலையை இக்கட்டுரை வடிவத்தில் வரைவதில் பெருமிதம் அடைவதோடு இச்சந்தர்ப்பத்தை உருவாக்கித்தந்த இறைவனுக்கு நன்றி கூறி ஆரம்பிக்கின்றேன்.

விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தின் புகழ், பாரம்பரியம் என்பன அழிந்தொழியாது இன்றும் நிலைத்து நிற்பதற்குக் காரணம், இங்கு நிறைந்து காணப்படும் மண்டபங்களோ, சுற்றி எழுப்பப்பட்டிருக்கும் மதில்களோ, விசாலமான விளையாட்டு மைதானமோ, வீதியோரமாக வித்தியாலயத்தை அழகுபடுத்திக் கொண்டு கம்பீரமாகக் காட்சியளிக்கும் காலைக் கூட்ட மண்டபமோ அல்ல. எல்லாம் வல்ல இறைவனின் அருள் இங்கு அறிவைப் பெற வருகின்ற மாணவ மணிகள், அதிபரின் அயராத தளராத நிலைப்பாடான முயற்சி, கடமை செய்வதே எம்பணி என எண்ணுகின்ற ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர் பழைய மாணவர் நலன் விரும்பிகள் இவர்களால்தான் என்றால் மிகையாகாது.

அன்று மகாவித்தியாலயம் ஆன காலத்திலிருந்து 1976ம் வருடம் வரை கிட்டத்தட்ட ஆயிரம் மாணவர்களுக்கு மேற்படாது அளவான தொகையோடு கல்வி, கலை விளையாட்டு வெளிவேலை போன்ற சகல விடயங்களிலும் அகில இலங்கை ரீதியில் முன்னணியில் நின்றது எமது வித்தியாலயம். இக்கால கட்டத்தில் 1971ம் வருடம் தராதரப் பத்திரமற்ற ஆசிரியையாக முதல் நியமனம் பெற்று அதிபர் க. ஜெகநாதன் அவர்களுக்குக் கீழ் பணி செய்யப் பதவி ஏற்றேன் யான். அன்றிலிருந்து அதிபர் கணநாதப் பிள்ளை, அதிபர் சிவசுப்பிரமணியம், அதிபர் இரத்தினசிங்கம் ஆகியோருக்குக் கீழும், இற்றை வரை அதிபர் J. ஜுனைதீன் அவர்களுக்குக் கீழும் மிகத்திருப்தியான பணி செய்கின்றேன். இவ்வாறு ஒரே வித்தியாலயத்தில் பல அதிபர்களுக்குக் கீழ் பல ரகமான பல இன மாணவர்களோடு பழகிப் பணி செய்யும் பாக்கியம் கிடைப்பது மிக அரிது. இதன் வாயிலாகப் பல அனுபவ அறிவுகளைப் பெற்றேன்.

1977ல் துர்அதிர்ஷ்டவசமாக நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளால் மாணவர்கள் தொகையில் ஆசிரியர்கள் தொகையில் திடீர் வீழ்ச்சிஏற்பட்டது பின்படிப்படியாக உயர்ச்சியடைந்து அதிபர் K. இரத்தினசிங்கம் அவர்களின் தலைமையில் இயங்கிக் கொண்டிருந்த பொழுது 1984ம் வருடம் ஏற்பட்ட மறு பிரச்சினையாக மீண்டும் மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட நேரிட்டது. இக்கால கட்டத்திலேயே வித்தியாலயத்தைப் பாதுகாப்பதற்காகப் பொறுப்பேற்று அதிபராகவும் கடமையேற்றார் தற்போதைய அதிபர் J. ஜுனைதீன் அவர்கள். இவர் இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர், உதவி ஆசிரியர், அதிபர் பெற்றார் என்பது பெருமையோடு குறிப்பிடக்கூடிய விடயமாகும். பின் அதிபரின் முயற்சியால் மாணவர் தொகையில் படிப்படியாக உயர்ச்சிகிடைத்தது. தற்போது கிட்டத்தட்ட 400 மாணவர்களாலேயே வித்தியாலயம் உயர்ந்தும் சிறந்தும் விளங்குகின்றது என்பதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

ஆரம்ப வகுப்புகளில் 20 வருடங்களுக்கு மேல் பணி புரிந்து வரும் யான் குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வருடங்கள் தொடர்ச்சியாகவே முதலாம் ஆண்டில் கற்பித்து வருகின்றேன். ஆதலால் இவ்வித்தியாலயத்தின் மாணவர் நிலைகளைப்பற்றி நன்கு அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு எனக்குண்டு யான் அறிந்த ஏனைய வித்தியாலயங்களோடு எமது வித்தியாலயத்தை ஒப்பிடும்பொழுது எமது மாணவர்கள் கல்வித்தரத்திலும் ஒழுக்கப் பண்புகளிலும் உயர்ந்து விளங்குகின்றார்கள் என்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். "எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே" அண்மைக் காலத்தில் மாவட்டரீதியாக நடைபெற்ற பரீட்சைகளில் எமது வித்தியாலயத்தை வகுப்பு ரீதியான புள்ளி விபரங்களின்படி ஏனைய வித்தியாலயங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், எங்கள் மூன்றாம் நிலை மாணவர்களின் புள்ளியே ஏனைய வித்தியாலயங்களின் முதலாம் நிலைப் புள்ளியாகக் காணப்பட்டது. இவ்வுண்மையான நிலையை அறிந்து எமது வித்தியாலயம் பெருமைப்பட வேண்டும். வேறு பல போட்டிகளிலும் முதலிடங்களைப் பெறுகின்றார்கள். எனவே அன்றைய நிலையில் இருந்து இன்றும் வித்தியாலயம் எவ்வகையிலும் தரத்தில் குறைந்துவிடவில்லை ஒரு வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் முதல் முக்கியம் ஆசிரியர்களின் பணியே அன்றி மாணவர்களின் தொகை அல்ல என்பது தெட்டத் தெளிவாகத் தெரிய வருகின்றது.

விவேகானந்த தமிழ் வித்தியாலயம் மகா வித்தியாலயம் ஆன காலகட்டத்தில் முதன் முதல் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் செல்வன் சிவானந்தராஜா, செல்வன் இராஜசிங்கம், செல்வி கும்பான் நோனா ஆகிய மூவர் சித்தியடைந்து கலைப் பிரிவில் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் இருவர் இந்து மாணவர்கள் ஒருவர் முஸ்லீம மாணவியுமாவார். இது வித்தியாலயத்தின் முதலாவது வெற்றியும் சாதனையுமாகும் இவ் வெற்றிக்கும் சாதனைக்கும் உரியவர்கள் அதிபர் க. ஜெகநாதன் அவர்களும் அவரது துணைவியார் திருமதி சகுந்தலா ஜெகநாதன் ஆகிய இருவருமேயாகும். கற்பித்தலில் இவர்கள் இருவரதும் அயராத பணியே இம்முதல் வெற்றிக்குக் காரணம் என்பதை யாம் மறுக்கவோ, மறைக்கவோ குறிப்பாக முஸ்லீம்கள் மறக்கவோ முடியாது முயற்சி தொடர்ச்சியாக முன்னேறி விஞ்ஞான, மனையியல் கூடங்கள் அமைக்கப்பட்டு விஞ்ஞான. மனையியல் கூடங்கள் அமைக்கப்பட்டு விஞ்ஞான உயர்கல்வியும் ஆரம்பிக்கப்பட்டது. காலைக்கூட்ட மண்டபத்திற்கு அத்திவாரம் இடப்பட்டதும் இவரது முயற்சியே என்பதை யாவரும் அறிவர். தற்போது அநுராதபுரம் உயர் நீதி மன்றத்தில் கடமைபுரியும் சட்டத்தரணி S. H. ஸாஹிர் அவர்களும் இவ்வித்தியாலயத்திலேயே கல்வி பயின்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர் இதுவும் க ஜெகநாதன் அவர்களின் காலப் பிரிவிலேயே என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

அதிபர் சிவசுப்பிரமணியம் அவர்களின் காலப்பகுதியில் முதன் முதல் இருவர் வைத்தியப்பிரிவில் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்கள். இதுவும் வட மத்திய மாகாணத்தின் முதலாவது சாதனை இவர்களும் ஆரம்ப வகுப்பு முதல் தொடர்ச்சியாக இவ்வித்தியாலயத்திலேயே கல்வியைப் பெற்றவர்கள் என்பது முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விடயமாகும். இதில் டொக்டர் புவனேஸ்வரி சன்முகநாதன் அண்மைக்காலத்தில் அநுராதபுரம் பொது வைத்திய சாலையில் D. M. O. வாகக் கடமையாற்றினார் என்பதை பெருமிதத்தோடு கூற வேண்டும் இதைத் தொடர்ந்து பலர் விஞ்ஞான பொறியியல் துறைகளுக்கும் தெரிவாகிக்கொண்டே இருந்தார்கள் இவற்றுக்கெல்லாம் காரணம் அதிபரின் முயற்சியால் இங்கு வந்து சேவை செய்த உயிரியல் இரசாயன பௌதீக பட்டதாரி ஆசிரியர்களின் கடமை உணர்ச்சி என்று கூறினால் பொருத்தமாக இருக்கும். ஆசிரியர் பாடுபட்டால் ஊக்கமுடைய மாணவர்களைப் பயன் அடையச் செய்யலாம். மேலும் அத்திவாரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த காலைக் கூட்ட மண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம் கட்டி எழுப்பப்பட்டது இவரது காலக் கட்டத்தில் மிக முக்கியமான விடயமாகும்.

விசேடமாக இன்றைய அதிபர் J. ஜுனைதீன் அவர்களின் காலப் பிரிவில் புராதன நிலையில் இருந்த காலைக்கூட்ட மண்டபம் பூர்த்தியாக்கப்பட்டது சிறப்பம்சமாகும். குறிப்பாக அன்று போல் இன்றும் விவேகானந்த மகா வித்தியாலயம் ஆரம்ப வகுப்பில் இருந்தே தரமான திறமையான மாணவர்களை தயார் படுத்திக் கொண்டிருக்கின்றது. குறைந்த பட்சம் 20 மாணவர்கள் சேர்க்கப்பட்டால் 15 மாணவர்களுக்குக் குறையாமல் திறமையானவர்களாக அடுத்த வகுப்பிற்குச் செல்கின்றார்கள். கற்பித்தலில் இது மிகத் திருப்திகரமானதென்றே நான் கருதுகின்றேன். 1993ல் கல்வி அமைச்சிலிருந்து மேற்பார்வை குழுவாக எமது வித்தியாலத்திற்கு வருகை தந்த கல்விச் செயலாளர், உயர் கல்வி அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர்கள் எல்லா வகுப்புகளையும் மேலோட்டமாக பார்வையிட்டதன் பயனால் எல்லா வகுப்புகளிலும் திறமையான மாணவர்கள் இருப்பதை அவர்கள் காணக்கூடியதாய் இருந்தது. ஆகவே எல்லா வகுப்புகளிலும் மிகத் திறமையான சுறுசுறுப்பான மாணவர்கள் இருப்பதாக ஆசிரியர் கூட்டத்தில் பகிரங்கமாகக் கூறினார்கள்.

மாணவர் தொகை குறைவாய் உள்ள இந்நிலையில் எமது வித்தியாலயத்தை விவேகானந்த மகா வித்தியாலயமாகவே வைத்திருப்பதற்கும், ஆசிரியர் பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் ஒற்றிணைப்புப் பிரச்சினைகளைத் தவர்ப்பதற்கும் அதிபர் பட்ட கஷ்டங்களையும் இன்னல்களையும் சொல்லில் வடிக்க முடியாது. "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்பதற்கு ஒப்ப இங்கு உருவாகி வெளியாகின்ற திறமையான மாணவர்களைக் கண்டு களிப்படைகின்றார். அதிபர் பொதுவாக எல்லா வகைகளிலும் வித்தியாலயம் சிறப்பாக இயங்குகின்றது. தற்போது உயர் வகுப்பில் சில விடயங்களிற்கு ஆசிரியர் பற்றாக் குறை இருந்த போதிலும், அதற்கு ஆவன செய்து குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இதற்கு இறைவனும் துணைபுரிகின்றான். அன்று போல் என்றும் இங்கு வாழ்கின்ற முஸ்லீம்கள் இவ்வித்தியாலயத்தில் பயன் பெற்று உயர்வடைய ஆசிரியர்கள் உதவி புரிவோமாக! ஆசிரியர் தமது கடமையைச் செவ்வனே செய்தால் மாணவர் நல்ல பயனைப் பெறுவது நிச்சயம்.

"பணி செய்து கிடப்பதே எமது கடமை"

திருமதி. நோனா சபீனா ஜுனைதீன்

**உயிர்களுக்குச் சேவை புரிவதிலும் பார்க்கப் பெரிய தருமம் வேறு இல்லை. இந்தத் தருமத்தை அப்பியாசித்தால் ஒருவனுக்கு "உள்ளங்கை நெல்லிக்கனிபோல் முக்தி வந்தெய்தும்.**

**— சுவாமி விவேகானந்தர்.**

WITH BEST COMPLIMENTS

FROM

# HUSSAIN STORES & RICE MILLS

## GENERAL MERCHANTS

**MAIN STREET,**
**HORAWAPOTHANA.**

**T'Phone: 025-8429**

*With Best Compliments*

*from*

# LAKSARI MOTOR STORES

**No. 96, BANK SITE,**
**ANURADHAPURA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்திய உள்ளம் (சிறுகதை)

இனிமையான காலைப் பொழுது ராசிக் ஹாஜியார் "சுபஹு" தொழு கையை முடித்துவிட்டு, வீட்டு முன் வாச லில் அமர்ந்து தேனீர் பருகிக் கொண்டி ருந்தார். அவ்வேளையில் ராசிக் ஹாஜி யாரின் கடையில் வேலைசெய்யும் மரைக் கார் தலைதெறிக்க ஓடி வந்து. ஹாஜி யார் ..... ஹாஜியார்...... எல்லாம்..... போயிட்டு..... என்று மூச்சிரைக்க தலை யில் அடித்துக் கொண்டு கத்தினான் "டேய்" சொல்லுறத ஒழுங்கா சொல் சும்மா காலையில் கத்தாம என்று அதட்டி னார். அத்தான் நேத்து கொழும்புக்குப் போன லொறி எக்சிடன் பட்டு நாசமா போயிட்டு என்று சொன்னவுடன். "யா அல்லாஹ்" என்னுடைய பத்து லச்சம் போயிட்டே என்று கத்தினார்.

வேலைக்காரன் சொன்ன வார்த்தை யைக் கேட்டவுன் ஓடி வந்த ஹாஜியாரின் மகன் நசீமும் மனைவி ஆயிஷாவும் பத றிப் போய் அப்ப பாரூக் நாநா என்ன ஆனார்? என்று வினவ அவர் "மௌத் மௌத்தாகிவிட்டார்" என்றான் உடனே நசீமின் இதயமே வெடித்து விடும் போல் இருந்தது. ஹாஜியார் எந்தவித அனுதா பமும் தெரிவிக்காமல் "மடமனுசன் ஓட்ட தெரியாம வாகனத்த ஒட்ரது பார்த்து ஓட்ட வேணாம். இப்ப எவ்வளவு நட்டம் எனக்கு" என்று தலையில் அடித்துக் கொண்டு புலம்பினார்.

என்றாலும் நசீமின் மனம் பாரூக் நாநாவின் குடும்பத்தைச் சுற்றி வந்தது. பாவம் மூன்று பெண் பிள்ளை கள். அவர் மனைவி ஆரிபா தாத்தா என்ன செய்வார்கள்? பாரூக் நாநா எங் கள் கடையில் இருபது வருடமாக மாடாய் உழைத்தார். இறுதியில் எங்களுக்காக உயிரையே விட்டுவிட்டார். என்று எண் ணும் போது அவனுடைய தலையே வெடித்துவிடும் போலிருந்தது.

நசீம் ராசிக் ஹாஜியாரின் ஒரே மகன் க.பொ.த. உயர்தரம் வரை படித்துவிட்டு பல்கலைக் கழக நுழைவுகிடைக்காததால் தந்தையின் வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான். எப்பொழு துமே தந்தைக்கு எதிர்மாறான சிந்தனை யைக் கொண்டவன். என்றாலும் சமுதா யப் பற்றுடைய தன்னுடைய செயல்களை தந்தைக்காக கட்டுப்படுத்தி வைத்து வாழ் பவனாகவே இருந்தான். நசீமின் மனம் பாரூக் நாநாவின் குடும்பத்தின் எண்ணமே அவனுகடைய அடிமனதை செல்லாய் அரித்தது.

அன்று "இஷாத்" தொழுகையை முடித்துவிட்டு எல்லோரும் இரவு சாப்பிட் டுக் கொண்டிருந்தார்கள். அவ்வேளை நசீம் "வாப்பா நா ஒரு "பெக்டரி" ஒப் பன்" பண்ணலாமனு இருக்கேன், அதா வது வெளிநாடுகளுக்கு ஏத்துற சாமான் கள் உடுப்புகள். விளையாட்டு சாமான்கள் செய்ற பெக்டரி நீங்க என்ன நினைக்கி றீங்க"? "வெறிகுட்" நல்ல யோசனை "அத்தான் வாப்பா நாம்ம உழைக்கிற பணத்த, ஒழுங்காக முதலீடு செய்யத் தெரியனும் பணத்தை சம்பாதிச்சி வெறும் பெட்டிக்குள்ள மட்டும் பூட்டி வைச்சி அத பெருக்கமுடியாது. அதனால் இப்படி முத லீடு செஞ்சா, நலலம்னு நினைக்கிறேன்." அதுசரி மகேன் நீங்க அத எங்க தொடங் கலாம்னு நினைக்கிறீங்க" கொழும்பு லையா? 'இல்ல வாப்பா" நம்ம ஊரில தான் எவ்வளவு ஆண்களும், பெண்களும். வேலையில்லாம இருக்காங்க, அது மட் டுமா இப்ப நம்ம அகதிகள் எவ்வளவு பேர் வேலையில்லாம கஸ்டப்பட்ராங்க? அதனால்தானே வெளிநாட்டுக்கெல்லாம் போறாங்க. பாவம் என்று கூறியதுதான் தாமதம், ஹாஜியார் வேகமாக தனது கைகளை கழுவி உதறிவிட்டு, "இந்த பாருங்க மகேன் நீங்க ஒன்னும் எங்களு டைய பணத்தில மத்தவங்கள வாழவைக்க ஆசப்பட வேணாம். இங்க உள்ளமட பயல்களுக்கு இது ஒன்னும் புரியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா எங்கட பணத்த வீணாக்காமா வேலையப்பாருங்க என்றார். இல்ல வாப்பா அந்தப் பொறுப்ப நீங்க என்ட உடுங்க நா ஒரு வருடத்தில் உங்களுடைய முதலையும், இலாபத்தையும் உழைத்து தர்றேன். என்றான். ஹாஜியார் ஒன்றும் பேசாது எழுந்து சென்று விட்டார்.

பாரூக் நாநாவின் குடும்பநிலை பெரும் பாடாகவே இருந்தது. வயதுக்கு வந்த இரண்டு பெண்பிள்ளைகள். அவள் எத்தனை நாளைக்குத்தான் இப்படி கஸ்டப்பட்டுக் கொண்டிருப்பது நசீமின் ஆடைத் தொழிற்சாலையில் தன்னுடைய இளைய மகளுக்கு கிடைத்த வேலை வாய்ப்பையும் தன்னுடைய முயற்ச்சியையும் கொண்டு குடும்பச் சக்கரத்தை ஒரு வாறு பாரூக் நாநாவின் மனைவி ஆரிபா ஓட்டிக் கொண்டிருந்தாள். இன்னும் மூத்த மகளின் கல்யாணத்திற்கு என்ன செய்வது அவ்ருடைய வயதும் நாளுக்கு நாள் ஏறிக் கொண்டிருக்கின்றது என்ற கவலையுடன் தான் ஒரு முடிவுக்கு வந்தவளாக தன்னுடைய செயற்பாட்டை ஆரம்பித்தாள்.

நசீமின் சிறந்த நிர்வாகத்தினாலும், திறமையினாலும் தொழிலாளர்களின், உழைப்பினாலும். அவனுடைய தொழிற்சாலை அதிக இலாபத்தை நசீமுக்கு ஈட்டிக் கொடுத்தது. இதைக் கண்டு ஹாஜியார் உள்ளர மகிழ்ந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை ''மகேன் இந்த முற நமக்கு வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைச்சிருக்கு எனவே நீங்களும் இந்தமுறை ஹஜ்ஜிக்கு எங்களோட வாங்க, நானும் உம்மாவும் இந்தமுறையும் ஹஜ் செய்ய நினைத்திருக்கிறோம்'' என்றார். இப்படிக்காமிக் கொண்டிருக்கும் போதே பாரூக்நாநாவின் மனைவி ஆரிபா ஹாஜியாரின் வீட்டு வாசல்லில் மெதுவாக வருவது .தெரிந்தது. ஹிாஜியார் கணைத்துக் கொண்டே ''ம... என்ன இந்தப்பக்கப்? என்றார். அதற்கு ஆரிபா வந்து வந்து ஹாஜியார் எங்களுடைய மகளுக்கு ஒரு நல்ல இடம்ஒன்று வந்திருக்கு அத செஞ்சு வைக்க எனக்கு கொஞ்சம் உதவி செஞ்சிங்க என்டா 'அல்லாஹ்'' உங்களுக்கு நன்மையத் தருவான். என்றான் உடனே ஹாஜியார் ''ஒன்ட புருசன் கண்ணு முக்கு தெரியாம போய் முட்டி மௌத்தாகி என்ட பத்து லட்ச்சத்தை அழிச்சாரு நீ நஸ்டஈடா கேக்குறா என்ன எல்லாரும் விளையாடப் பாகிறிங்களா? என்று பேசி அவளை விரட்டிவிட்டார்.

நேற்று மாலை நடந்த தன்னுடைய தந்தையின் அன்யாயத்தை எண்ணி நசீம், ஒரு முடிவுக்கு வந்தவனாக தன்னுடைய தந்தயை சந்தித்து ''வாப்பா நீங்க நேத்து ஆரிபா தாத்தாவ பேசி விரட்டினது சரியே இல்ல. அவங்க எங்களால் தானே பாதிக்சப்பட்டவங்க நாம நிச்சயமா அவங்களுக்த உதவி செய்ய வேணும். நா இந்த வருசம் ஹஜ்ஜிக்கு போவத விட அவங்க மகள் விசயத்துக்கு உதவினா அல்லாஹ் அத விட நன்மையத் தருவான்'' ''வாப்பா நீங்க செய்ற பாவத்துக்கெல்லாம் பரிகாரம் காணம சும்மா ஒரு தரத்திற்கு பத்து தரம் ஹஜ் செய்றதில என்ன பயன்? முதலாவது ஏழைகளுக்கு கொடுக்க வேண்டிய ஏழை வரியை நீங்க கொடுக்க மாட்டீங்க'' என்று ஆத்திரமாக கத்தினான் ஹாஜியார் அவனின் சீற்றத்தைக் கண்டு தன்னுடைய மகன் தன்னைப்பற்றி இப்படி கணக்குப் போட்டு வைத்திருப்பது இப்போதுதான் புரிந்தது. என்ன செய்வது. ஆனால் அவ்வேலையில் ஒன்றுமே பேசமுடியவில்லை. மகனின் வசனங்கள் ஹாஜியாரின் இதயத்தை அப்பால் குத்தியது போலிருந்தது. மெய்தான் நான் என்னுடைய பணத்தைவைத்து என்ன பண்ணினேன்? ஒன்றுமே உருப்படியாக செய்யவில்லை. இந்த சொத்துக்கள் எல்லாத்தையும் என்னுடைய நலனுக்காகவே செலவு செய்தேன் இந்த சமுதாயத்தைப்பற்றி சிறிதள வேனும் சிந்திக்கவில்லை எத்தனை அகதிகள்? எத்தனை ஏழைக்குமர்கள்? திறமையிருந்தும் படிப்பைத் தொடர முடியாத மாணவ மாணவிகள் இவர்களைப் பற்றி நான் கொஞ்சம் கூட சிந்திக்கவில்லை. இந்த குறைபாடுகளையெல்லாம் வைத்துக் கொண்டு நாம் இற கடமை மட்டும் நிறைவேற்றினா அல்லாஹ் அத ஏற்றுக் கொள்வானா? இல்லை ஏற்றுக் கொள்ளவே மாட்டான் இன்றில் இருந்து என்பணத்தை சமுதாயத்தின் நலனுக்காக செலவிட அவருடைய உள்ளம் எண்ணியது.

**M. T. சம்சுண்நிஸா**
**ஆண்டு - 12.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையை ஒழிப்போம்

A. S. ஜெயானந் ஆண்டு 13.

வருமை உற்று வாழ்வோர் பலர் இவ்வுலகிலே
பொருமை அற்று பிச்சைஎடுப்பவர் பலர் இந்நாட்டிலே - பசி
கொடுமை வினால் மாழ்பவரும் பலர் நடுறோட்டிலே - உடலில்
தசை ஒட்டி நடைப்பிணம்போல பலர் இம்மண்ணிலே.

மகாநதி ஓடுதாம் ஆபிரிக்காவிலே - அங்குதான்
மகாபட்டினி நிலவுகிறது கண்டத்து நாடுகளிலே
மலையுயர காடுகளும் அங்கிருந்த போதிலே
பஞ்சத்தால் மடிகிறான் தன்பாட்டிலே.

வளம் பல இருந்தாலும் வாட்கிறது இயற்கையே
வழிந்தோடும் வெள்ளமும் வாட்டமானகாற்ரம் தருகிறது வருமையே
இவை இரண்டு மட்டுமா வாட்கிறது மனிதனையே
இவற்றோடு புவிநடுக்கமும் எரிமலையும் தொடருது வரிசையாய்.

கோர யுத்தமில்லாமல் இருப்பது எந்தத் திசையிலே
மனித இரத்தமது பெருக்கெடுத்து ஓடுது பெரும்விசையிலே
வல்லரசுகள் வளங்களை அழிக்கின்றன வல்லரசென்ற துணிவிலே
மக்களோ உடமையிழந்து அகதியாய் நிற்கிறார் தெருவிலே.

அகதி என்ற மகுடம் தரித்தால் தொழில் இல்லையே
அதை நினைத்து இருந்துவிட்டால் உதரம் விடுதில்லையே
அவசர நிவாரணம் வயிற்றை நிரப்ப போதவில்லையே
நாளை பசி தீர்க்க் ஏதுகுவதை தவிர வேறுவழியில்லையா?

இவையனைத்தையும் எதிர்த்து நிற்க மனிதன் இல்லையே
இனியும் பொறுத்திருந்தால் மீண்டும் வருமை வறுமையே
இப்பொழுதே புறப்படுவோம் இனிப் பொறுமை இல்லையே
பொருத்திருந்தால் வறுமைதான் என்றும் வாழ்வில் எல்லையே.

பசுமையை பரப்புகின்ற பாய்ந்தோடும் ஆற்றையே
வேகமாய் திருப்புவோம் பாலைவனம் நோக்கியே
பாலைதனில் உண்டாக்குவோம் பசுமைதரும் சோலையே
பார்தனில் அழித்திடுவோம் பட்டினி கொடுமையே.

ஏந்துவோம் நாங்கள் உயிர்நாடியாய் கலப்பையே
ஏகமாய் நம்புவோம் மனிதநேயம் தரும் உழைப்பையே
உழைப்பே உயர்வி. எந்தத் தொழிலும் எங்கள் கொள்கையே
அதனை மறந்தால் எங்கள் வாழ்வில் அர்த்தமில்லையே.

உழைத்தே உண்டாக்குவோம் நல்வளத்தையே
உதைத்தே விரட்டுவோம் சோம்பேறித்தனத்தையே
உழைப்பினால் உயர்த்துவோம் நம்நாட்டையே
உண்மையாய் உழைப்பதால் ஒழித்திடுவோம் வறுமையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

# NADIA TRADERS

**109, MAIN STREET,**

**ANURADHAPURA.**

**Tele Phone: 025 - 5109**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EFFECTIVE LANGUAGE TEACHING

Soceity is changing and students are changing with it. The over-whelming impact of television and other media have made our students more sophisticated, more aware and more mature, but these also tend to leave them less literate, and less able to express themselves effectively in speaking and writing. If students are to be guided into proper language study they should initially be introduced into the basic elements of language structure. For this purpose cultivation of the reading habit and a desire for listening to simple spoken language is very important. Pictorial and illustrated reading material would be ideal for creating interest. Once consistency is achieved in this direction expanded reading could gradually be brought in.

All reading and listening material for beginners should essentially be psychologically sound. Careful motivation and encouragement is necessary to get the beginner interested in such selected material. An early stager should not be thrust at once into paragraphs, as it is commonly a too difficult concept for many of them. They should first be exposed to basics. Once these are mastered well, building of solid simple sentences could be introduced. Thereafter students couid be led quite easily into the formulation of paragraphs.

When students are thorouch with the form and meaning of paragraphs, they will be able to grasp the concept of composition, This would create in them a keenness and interest to persue the art of composition, and even lead them to attempt compositions of their own. Systematic introduction into language study in this manner would ignite the potential in students and develop a desire to express their ideas freely.

It is of vital importance to keep in mind the co-relationship between listening or speaking skills and writing skills. Reading and listening throw into the student s mind ideas which form the facts and material required as substance for their written expressions. Writing skill is reinforced mainly by reading and listening All language concepts should be taught in the context of using structur. to improve display and communication. Abundant drill or usage would assist in the inculcation of good language habits. All efforts should be made to create an awareness in the mind of the student about the need for every sentence made, to be clear, concise, and complete. Such a solid foundation in the early years would ensure the achievement of very high quality results in expression and communication with growing experience and maturity.

Every child has some degree of language skills. It most needed, and provide ample activities and excercises in such areas. These activities should be enticing functional, challenging, and on the whole study-oriented. If due priority is not given to the promotion and development of of basic languag skills it would only result in building our educational castles on quick sand

**MANEL KARUNARATNE**
**Asst. Teacher**
**(ENGLISH, TRAINED)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# NIROSHA TRANSPORT SERVICES

396/2, KADA 12, COURT PLACE, ANURADHAPURA.

නිරෝෂා ප්‍රවාහන සේවා

ගොඩනැගිලි ද්‍රව්‍ය සපයන්නෝ
ගඩොල්, වැලි, කළුගල් ආදිය

396/2, කඩ 12, උසාවි පෙදෙස, අනුරාධපුර.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Importance of learning English

English is all ever growing, living language and it is understood through out the world. It is not a language of the British alone, but it is a global language. Now we are living in a world which is fast developing Technically, Scientificaly and in so many other ways Hence we have to change our life according to the fastest development.

The development of a country depends on the inteligence and skill of the people of that nation. In our country the two national languages are not sufficent to get higher education so as to compete with the rest of the world, Because most of the that are published in English. therefore, In order to get a vast knowledge in various subjects we must know English. For the rapid promotion of Administrative Judicial Educational, Technical work of the nation, the people of the country should know English very well. It is through the knowledge of English that you can gather Valuable informations from books, magazines and news papers that carry the latest discoveries and developments.

Every country has its own Culture History and Philosophy which should ba spread among International community. This can be clone only by a common language. English which is spoken and understood in every corner of the world serves this purpose undispuledly.

noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்ட பொருளாதாரத்தின் விளைவு

செல்வி. வீரசிங்கம் தேவகி (B. Comhons) வர்த்தக ஆசிரியை

இலங்கையின் பெருந்தோட்ட பயிர்ச்செய்கை பொருளாதார சமூக அரசியல் ரீதியில் பல்வேறுபட்ட மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. 1505 இல் போத்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோதும் 1815 இல் பிரித்தானியரால் கண்டி கைப்பற்றம்படும் வரை பொருளாதார ரீதியான பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் கரையோர மாகாணங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தபோது போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய 3 பிரிவினரும் சமய ரீதியிலும், அரசியல் ரீதியிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தின எனவே பெருந்தோட்ட பொருளாதாரத்தில் அறிமுகத்தின் பின் பாரிய பொருளாதார மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் பயிர்ச்செய்கை ஆரம்பிப்பதற்கு முன்னரே சமூக ரீதியில் சில மாற்றங்கள் படிப்படியாக ஏற்பட்டுள்ளன. பெருந்தோட்ட பொருளாதாரத்தின் வருகை பொருளாதார ரீதியில் இலங்கையில் ஏற்படுத்திய மாற்றங்கள் முக்கியமாக கிராமிய பொருளாதாரத்தினை பாதிப்பதாகவே அமைந்துள்ளன. பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்கு முன் இலங்கையின் விவசாயப் பொருளாதாரம் ஒரு மானிய முறை பொருளாதாரமாகவே காணப்பட்டது, மிகவும் பின்தங்கிய முறையில் சுயதேவைப் பூர்த்தி நோக்கில் உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஈரவலையத்தில் ஏலம் கறுவா, கோப்பி, கொக்கோ பாக்கு என்பன பிரதானமாக பயிரிடப்பட்டன. உலர்வலயத்தில் நெல் பிரதான பயிர்செய்கையாக அமைந்திருந்தது. ஆனால் பெருந்தோட்ட பொருளாதாரம் காரணமாக இந்த மரபு ரீதியான மானிய முறை ஒரு முதலாளித்துவ முறையாக மாற்றப்பட்டது. இப்பொழுது இலங்கையின் பொருளாதாரத்தில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையும் வெளிநாட்டு வர்த்தகமும் முக்கிய மாணவையாக காணப்பட்டன.

1815 இல் கண்டி கைப்பற்றப்பட்டதன் பின் பெருந்தொகையான கண்டி நிலங்கள் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டது. அரசனுக்கும் நிலப்பிரப்புகளுக்கும். சொந்தமாக இருந்த இந்த நிலங்களின் பெரும்பகுதி சட்ட ரீதியாகவும் பலாத்காரத்தை பயன்படுத்தியும் கண்டி மக்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இதனால் கண்டி விவசாயிகள் நிலமின்மை பிரச்சனையை எதிர் நோக்கின இதன் மூலம் கண்டி மாகாணங்களில் மரபு ரீதியான கிராமிய உற்பத்தி நடவடிக்கைகள் பெரும்பாதிப்பை அடைய வேண்டியிருந்தது.

வரலாற்று அடிப்படையிலும், கண்டி சிங்களவருக்கும், கரையோர சிங்களவருக்குமிடையே சாதி வேறுபாடு காணப்பட்டது. கண்டிச் சிங்களவர் தம்மை உயர்ந்தவர் எனக் கருதுகின்றனர். இதனால் அவர்கள் தமது நிலங்களை இழந்து வேலையற்று இருந்த போதும் பிரித்தானியரின் நிர்வாகத்தின் கீழ் அடிமைகளாக பெருந்தோட்டங்களில் வேலைசெய்ய விரும்பவில்லை இதன் காரணமாக பிரிந்தானியர் இந்திய தோட்டத் தொழிலாளர்களை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. இந்திய தோட்டத் தொழிலாளர்களின் வருகை இலங்கையின் சமூக பொருளாதார அரசியல் ரீதியில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது, எனவே பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையே இந்திய தொழிலாளர்களை இறக்குமதி. செய்வதன் மூலம் இந்த பிரச்சனைகளுக்கு காரணமாக இருந்ததென கூறமுடியும்.

பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்கு முன் கண்டிய மாகாணங்களில் சமூகக் கட்டுப்பாடுகள் பொதுவாக கிராமிய மட்டத்தில் செல்வாக்கு மிகுந்த நிலப்பிரபுக்களாலே ஒழுங்குபடுத்தப்பட்டன. பெருந்தோட்டங்கள் பிரித்தானிய முதலாளிகளின் கடமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையால் இப்பொழுதும் அவர்களே கண்டிய மாகாணங்களில் உயர் வர்க்கத்தின ராக கருதப்பட்டனர். இதன் மூலம் ஒருநிலப் பிரபுத்துவ வர்க்க அமைப்பு மாற்றம் அடைந்து முதலாளித்துவ வர்க்க அமைப்பு தோற்றம் பெறுவதற்கு பெருந்தோட்ட பயிர்ச்செய்கை காரணமாக அமைந்துள்ளது. நிலப் பிரபு பண்ணையாக்கள் என்ற சமூக அமைப்பு மாற்றம் அடைந்த பெருந்தோட்ட முதலாளி, பெருந் தோட்ட தொழிலாளர் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பெருந்தொகையான மூலதனம் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டதனால் கிராமிய பொருளாதார அபிவிருத்தி ஈரவலயத்திலும், உலர்வலயத்திலும் புறக்கணிக்கப்பட்டது. பிரித்தானியரின் வருகையின் முன் பிரதேச நீர்ப்பாசன நடவடிக்கைகள் பெரிதும் விருத்தி செய்யப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் தொடர்ந்தும் கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவிரும்பாததனால் பாரம்பரியமான நீர்ப்பாசன நிர்மானிப்புகள் கைவிடப்பட்டு கிராமிய விவசாயம் பின்தங்கிய நிலையினை அடைந்தது ஒரு குறிப்பிட்ட காலத்தில் இலங்கை அரிசியை ஏற்றுமதி செய்த நினைவுடன் ஒப்பிடும்போது இதன் மூலம் கிராமிய விவசாயத்தில் ஏற்பட்ட பின்னனி பெரிதும் முக்கியத்துவமுடையதாகும்.

கிராமிய விவசாயம் புறக்கனிக்கப்பட்டு பெருந்தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி செய்யப்பட்டமையினால் இலங்கையின் பொருளாதார அமைப்பில் ஓர் இரட்டை தன்மை ஏற்படுத்தப்பட்டது. இரட்டை தன்மையின் அடிப்படையில் ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. இங்கு இறக்குமதி செய்யபபட்ட முக்கியமான உணவுப் பொருள் இலங்கையில் உற்பத்திசெய்யக்கூடிய எல்லா வாய்ப்புக் களையும் கொண்டிருந்தபோதும் அவை புறக்கணிக்கப்பட்டு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. பிரித்தானியர் கிராமிய விவசாயத்தை விருத்தி செய்வதற்கு விரும்பாமைக்கான அடிப்படை காரணம் அதன் மூலம் அவர்களின் முதலாளித்துவ நோக்கு நிறைவேறுவதற்கு வாய்ப்பு இல்லாமையால் கிராமிய விவசாயம் மாத்திரமன்றி கைத்தொழில் அபிவிருத்தி கூட அவர்களால் புறக்கணிக்கப்பட்டது. றப்பர் உற்பத்தியை பயன்படுத்தி றப்பர் கைத்தொழிலை இலங்கையில் விருத்தி செய்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாது இங்கிருந்து மூலப் பொருட்களை எடுத்துச் சென்று அவற்றை பயன்படுத்தி உற்பத்தி செய்த றப்பர் முடிவுப் பொருட்களை இலங்கையில் விற்பனை செய்தனர். இதன் மூலம் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை கிராமிய விவசாய அமைப்பில் மாத்திரமின்றி இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியிலும் பாதிப்பினை ஏற்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது.

பெருந்தோட்ட பொருளாதாரத்தின் அறிமுகம் சேவைகள் ரீதியாக சில முன்னேற்றங்களை இலங்கையில் ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது போக்குவரத்து, வர்த்தகம், வங்கித்தொழில், கல்வி சுகாதார நடவடிக்கைகள் என்பன இவற்றில் குறிப்பிடக் கூடியவை. பெருந்தோட்ட பொருளாதாரத்தின் வருகையினால் துறைமுக போக்குவரத்தும், வீதி றெல்வே போக்குவரத்துக்களும் வளர்ச்சியடைந்தன. ஆனால் இவ்வாறானா ஒரு வளர்ச்சி நாடு முழுவதுக்கும் பரந்த அடிப்படையில் மேற்கொள்ளப் படவில்லை. பெருந்தோட்ட நகரங்களுக்கும், துறைமுகங்களுக்கும், கொழும்புக்கும் இடையிலான அபிவிருத்திகளாக காணப்பட்டன. பெருந்தோட்ட பகுதியினை விடவும் இலங்கையில் ஏனைய பகுதிகளில் வீதி அமைப்பினை விருத்தி செய்வதில் நில அமைப்பின் அடிப்படையில் வசதியானதாக இருந்தபோதும் பிரித்தானியரால் புறக்கணிக்கப்பட்டது. தமது பெருந்தோட்ட நோக்கங்களுக்காகவே ஒரு குறுகிய பிரதேசத்தில் வலைய பின்னல் போன்ற வீதி அபிவிருத்தி வேலைகளை அவர்கள் மேற்கொண்டனர் இவ்வாறே வர்த்தகமும் வளர்ச்சியடைந்தது. பெருந்தோட்டங்களுக்கு தேவையான உள்ளீடுகளையும், உணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்து பெருந்தோட்ட உற்பத்திகளை ஏற்றுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதன் மூலம் வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்தது. பெருந்தோட்டதுறைக்கு நிதியுதவி வழங்கும் வகையில் வெளிநாட்டு வங்கிகள் அமைக்கப்பட்டன. கண்டி, கற்றன போன்ற மலையக நகரங்களிலும், கொழும்பிலும் இப்படியான வங்கிகள் அமைக்கப்பட்டு பெருந்தோட்ட தொழிலாளிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டன. இதன் மூலம் ஒரு வங்கித் தொழில் அபிவிருத்தி இலங்கையில் ஏற்படுத்தக்பட்டதெனினும் போக்குவரத்து வர்த்தகம், வங்கித்தொழில் என்பவற்றின் மூலம் ஏற்பட்டநன்மைகள் சுதேசிய மக்களுக்கு கிடைக்க வில்லை. வெளிநாட்டு வங்கிகள் வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் கடன் வழங்கும்போது வேறுபட்ட நடவடிக்கைகளை கைக்கொண்டமையால் வங்கித்தொழில் மூலமான நன்மைகள் உள்நாட்டவருக்கு கிடைக்கவில்லை.

கல்வி, சுகாதார சேவைகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பிடக்கூடியவை. கல்வி ரீதியான மாற்றம் போத்துக்கேயர் காலத்திலிருந்து கரையோர மாகாணங்களில் மேற் கொள்ளப்பட்டது. பிரித்தானியரும் பெருந்தோட்டப் பகுதியினை விடவும் கரையோர பகுதிகளில் கல்வியை விருத்தி செய்வதிலேயே அதிக கவனத்தை செலுத்தினர். இந்துமதத் திலும், பௌத்தமதத்திலும் நிலவிய சாதிப்பாகுபாடு கரையோர மக்களில் பெரிதும் பாதித் தது. இதை பயன்படுத்தி அன்னியர்கள் கிறிஸ்தவ மதத்தை தழுவச் செய்ததன் மூலம் கரை யோரப் பகுதிகளில் பாடசாலைகளை ஏற்படுத்தினர். மதம் மாறுபவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளும் அளிக்கப்பட்டன. இக்காரணங்களாலேயே ஒரு கல்வி வளர்ச்சி இலங்கையில் ஏற்பட்டது. எனினும் பெருந்தோட்ட பகுதியில் கல்வியினை அபிவிருத்தி செய்தால் தொடர்ந்தும் தொழிலாளர்களை பெற முடியாத நிலை ஏற்படும் என்ற கார ணத்தினால் அங்கு கல்வி வளர்ச்சி ஏற்படுத்தப்படவில்லை. எனவே அன்னியர் கால கல்வி முன்னேற்றம் ஒரு சில குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தென்பதையும் அக்கல்வி இலங்கைக்கு பொருத்தமற்ற ஒரு தவறான கல்விக் கொள்கையாக இருந்ததென்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

பெருந்தோட்ட பொருளாதாரம் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வங்கித்தொழில், வர்த்தகம் போன்ற சேவைகளில் ஒரு வளர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. பெருந்தோட்ட பொருளாதார காலத்திலிருந்து இத்துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் பலாபலன்களை இலங்கை பெறக்கூடியதாக இருந்துள்ளது. எனினும் இச்சேவைகளில் ஏற்பட்டுள்ள முன் னேற்றங்கள் இலங்கையின் பெரும்பான்மை மக்களுக்கு கிடைக்கவில்லை. நகரத்துறை சார்ந்திருந்த உயர்தர வர்க்கத்தினரும், நடுத்தர வர்க்கத்தினரும் இதன் மூலமான பலா பலன்களை அனுபவித்தனர். இதனடிப்படையில் இத்துறைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி கள் நகரங்களில் அதிகமாகவும் கிராமிய துறையில் குறைவாகவும் இருந்தமையினால் சேவை கள் ரீதியிலும் கூட ஒரு இரட்டை அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டது. நகரங்களின் நவீன வசதிகளைக்கொண்ட பாடசாலைகள், கிராமங்களின் வசதி அற்ற ஆரம்ப பாடசாலைகள், நகரங்களின் வசதியடைந்த வைத்திய வசதிகள், கிராமங்களின் மரபு ரீதியான நிறுவன ரீதி யற்ற தனிப்பட்ட கடன் கொடுப்பு என்ற அம்சங்களின் ஊடாக எல்லாம் இந்த இரட்டை அமைப்பு வெளிப்படுகின்றது. எனவே சேவைகள் ரீதியில் பெருந்தோட்ட பொருளாதாரம் சில முன்னேற்றங்களை ஏற்படுத்தியிருப்பினும் அவை நகரத்துறையில் சிறுபான்மை சார் பானதாகவே அமைந்திருந்தன.

பெருந்தோட்ட பொருளாதாரம் சமூக ரீதியில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மொழி, மதம், கலாச்சாரம், கட்டிடக்கலை, சமூக அமைப்பு போன்றவற்றில் இந்த மாற்றங் கள் காணப்பட்டன. இலங்கையின் தேசிய மொழிகளில் போத்துக்கேய ஒல்லாந்த, ஆங்கி லேய மொழிகளின் கலப்பு காணப்படுகிறது. கிறிஸ்தவ மதம் பௌத்தர்களாலும், இந்துக் களாலும் பின்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறே சுதேசிய மக்களின் பழக்க வழக்கங்கள், கொண்டாட்டங்கள் என்பவற்றிலும் கீழத்தேய நாகரீகத்தின் தன்மைகள் குறைவடைய மேலைத்தேய நாகரீகத்தின் தன்மைகள் கலந்து காணப்படுகின்றன. ஐரோப்பியர்களால் மேற்கொள்ளப்பட்ட கட்டிட ஆக்க முறையும் இங்கு காணப்படுகிறது. பாடசாலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயங்கள், நிர்வாகமையங்கள், விடுதிவசதிகள் போன்றவற்றின் ஒரு ஐரோப்பிய கட்டிடக்கலையின் தன்மைகளை அவதானிக்க முடிகிறது.

பெருந்தோட்ட பொருளாதாரம் சமூக அமைப்பில் பெரும்மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நிலப்பிரபு விவசாயத் தொழிலாளர் என்ற அமைப்பு மாற்றமடைந்தே பெருந்தோட்ட முதலாளி கூலி பெரும் பெருந்தோட்ட தொழிலாளர் என்ற அமைப்பு ஏற்பட்டது. இத்தாக்கம் கிராமிய துறையிலும் விவசாய தொழிலாளியையும், விவசாய முதலாளியையும் பாதித்தது. எனவே நிலப்பிரபுத்துவ ரீதியான சமூக அமைப்பு பெருந்தோட்ட பொருளாதாரத்தின் மூலம் ஒரு முதலாளித்துவ சமூக அமைப்பாக மாற்றமடைந்துள்ளது. அவ்வாறே இங்கு காணப்பட்ட சாதி அமைப்பிலும் வேறுபாடுகள் குறைச்கப்பட்டன. கண்டி கைப்பற்றப்பட்டதன் பின் முழு இலங்கையும் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டதன் மூலம் கரையோர சிங்களவர் கண்டிய சிங்களவர் என்ற வேறுபாடு படிப்படியாக குறைவடைந்து வந்துள்ளது. மேலும் வேறுபட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் சாதி அமைப்பு முறை அற்ற கிறிஸ்தவ மதத்தை தழுவியதன் மூலம் சமத்துவ நிலை ஏற்பட்டது.

பெருந்தோட்ட பொருளாதாரத்தின் வருகையினால் ஏற்பட்ட முக்கியமான ஒரு மாற்றம் தொழிற்சங்க இயக்கத்தின் மாற்றமாகும். பெருந்தோட்ட துறையில் கூலிபெறும். தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்ததன் மூலம் தொழிற்சங்க இயக்கங்கள் வளர்ச்சியடைந்தன இதிலிருந்து தொழிற்சங்க ரீதியான ஒரு செயற்பாடு இலங்கையில் இருந்து வந்துள்ளது எனவே பெருந்தோட்ட பொருளாதாரம் விவசாய கைத்தொழில் துறைகளில் பெரும்பாதிப்பினை ஏற்படுத்தியதன் மூலமும், சேவைகள் துறையில் நகரசார்பான வளர்ச்சியை ஏற்படுத்தியதன் மூலமும் இலங்கை மக்களின் கீழத்தேய நடைமுறைகளில் மேலைத்தேய நடைமுறைகளை புகுத்தி சமூக ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தியதன் மூலமும் இலங்கையில் இன்றைய சமூக பொருளாதார அரசாங்கம் பிரச்சனைகளுக்கு ஒரு முக்கியமான காரணியாக இருந்ததென கூறமுடியும்.


WITH BEST COMPLIMENTS

FROM

**KANDY STORES**

Dealers in Fancy Goods, and Hardware Items.

155, MAIN STREET,

HORAWAPOTHANA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

# C. P. ABDULLA & SONS

Madawachchiya

Agents of:

**LEVER BROTHERS**

**UNION CARBIDE**

**FREEMA FOODS**

Tele Phone: 025-5624
025-5625
025-5635

Branch:
91-A, OLD MOOR STREET,
COLOMBO-12.

Tele Phone: 01-446138
01-335496

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# ANBIA JEWEL CRAFTS

- ★ ENGRAVING JEWELLER
- ★ WIRE & SHEET ROLLING
- ★ BANGLES BENDING
- ★ PRESSING OF LATEST DESIGNS

**No. 11, MARKET SITE**

**ANURADHAPURA.**

**With Best Compliments**

**From**

# *N. M. S. JEWEL HOUSE*

DISTIRCTIVE JEWELLERY GUARANTEED FOR SOVEREIGN JEWELLERY

**23, MANNAR ROAD, MADAWACHCHIYA**

## என். எம். எஸ். ஜுவல் ஹவுஸ்

மங்கையர் மனங்கவரும் தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு

என்றும் நாடுங்கள்

**23, மன்னார் வீதி** **மதவாச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

# Shiyana Fancy Centre

# සියානා ෆැන්සි සෙන්ටර්

සාප්පු බඩු වෙළෙන්දෝ

Dealers in "National" Blenders Fans, Giftsets, School Bags
Watches and Fancy Items

**117, MAIN STREET,**
**ANURADHAPURA.**

*With Best Compliments*

*from*

★ ★

# ALFA TEX AND TAILORS

EXPERT TAILORS AND CUTTERS

**HI LIFE BUILDING,**
**ANURADHAPURA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*From*

**C. H. Abbas Kutty & Bros**

**GENERAL MERCHANTS**

DEALERS IN TEXTILES, GUNS, CARTRIDGES EXPLOSIVES.

**No. 101, MAIN STREET,**

**ANURADHAPURA.**

**Tele Phone: 025 - 5455**
**025 - 5231**

*With Best Compliments*

*from*

**LANKA HOTEL**

**For Special Bombay Sweet & Special Orders**

**107, ARMOUR STREET, COLOMBO-12.**

**T'Phone: 433052** **Office: 436605**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Fiftieth Birthday of a school.

by

***Mr. S. H. Mohamed Zahir, B. A.***

***Attorney - at - Law. Commission of Oath.***

A school celebrates its 50th birthaday. It is indeed a remakable event in the annals of a school. Today, Anuradhapura Vivekanada Tamil maha vidyalayam - my alma Mater - Celebrates its golden jubilee - the 50th birthday in a colourful way. Already a poster which announces the golden jubilee celebration is displayed in front of the school auditorium of the school Facing the high way. Thousands of people who pass this way would have noticed this attractive poster that carries the message of the Golden Jubilee : In order to give publicity to this event beautiful stickers are issued to the students for distribution among the public.

This school was started in 1944 that means 50 years ago. Swami Vivekananda, an Indian Hindu clergyman who was very famous in the global spritual circles visted Sri Lanka on his way home after attending an International Conference on Religions held in Chicago, In that year. During his short stay he visited Anuradhapura - the ancient of Capital of Sri Lanka. In order to pay a tribute in memory of his visit, this school was named after him. M/S Sivakolundu, Ramasamy and Natarajah some of the legal Iumineries from the Anuradhapura bar with Mr Sittamapalam, a business magnet and theatre owner joined hands to open this school, with a very few students and a single teacher. At that time one could have seen two other catholic educational institutions namely St. Joseph's College and Holy Family Convent, one for boys and the other for girls, catered the educational needs of the Tamil speaking children of this District. These two schools run by Missioneries were situated in the sacred city close to Ruwanweliseya. Larer they were Shifted to the New Town and the bulidings used by these two institutions are now used by the buddhist University, known as Dharmasirawaka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Soon after the Independance there was a silent revolution took place in the country in all walks of life. In the sphere of education the Government opened Swabasha schools and the Central colleges all over the Island. Free education was introduced by Nonorable C. W. W.. Kannangara who is still remembered as Father of Free Education. He built the Central Celloges to run parallel to the Missionery schools.

At that time housands of Tamil people were living in Anuradhapura in harmony with their Sinhalese brothren for many generations. They dominated the area called Mawadi in Tamil and Ambagasweediya in Sinhalese near the Bo - tree Temple, Ellakattu Road that branched off form Ambagasweediya, Jaffna Junction, Tissawewa, Basawakulame, Kutam Pokune and Matale Junction. Some government servants who came from the North and East get themselves domiciled here after their retirement form Services as they found this Town better and more suitable them to their native places. They built a beautiful ' Kavil' in the heart of the Sacred City knomn as the Kadiresan Temple on a piece of land just close to the present Amman Kovil that you find on the road that leads to the Bo - tree Temple. There is another famous temple - the pilleyar Kovil - at pillayar Kovil Junction. These two places of worship are not limited only to the Hindu devotees but they were extended even ti the Budhists and other religions. On festival days the Buddhists never failed to extend their patronage to celebrate the events in a fitting manner.

The old Town hall that dipicts its archiectural values even today stands against time as magnificent struture. This bwas built under the able direction of spervision of Mr.Nataraja, the then Chaiman of the Urban council. He was a Famous oriminal lowyer who had the distiction of being the frist chairman of the local council. It was when Mr. Kandasamy was the chairman, that the council was dissolved for mal - administartoun which orcated history in the Local Government adminstration. Believete or not, it is during this period in a South Indiyan businessmen. - Sockalingam Chettiyar rose to the position of city father. This was an ample testimony for the that time amily and unity that prevailed among the different communities.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As soon as the Swabasha movement came into force a fewprlominent Tamil citizens wanted to start a Tamil school with Hindu environment. An idea place was found in the proximity of the Kadiresan Templand Kadiresa Peruman was reckoned as the Guardian Deity of the school . Mr Arulpragasam a tall thin scholar, a qualified Saivappulavar with thiruneeru and pottu on his fore - head took office as the frist principal of the school. He had a one man show with a small number of puplis. Under his tutelage the school commenced its humble journey. In 1963 Mr. Nawaratnam cecom the second Princpal. During his tenure of office the school was promoted as a Vidyalaya and the students and the teachers were increased day by day. The teachers at that time not only dedicated themselves for the noble service they were in proved their metal in art and cultural field. I can still remember the good old teachers Mr. Pasupathipillai fondly called by all as ' Pasu' Mr. Nagarajah konwn as ' nagu' Mr. Nallathamby, Mr. Vallipuram and Mrs. Shanmugam who was in charge of the Kindergarten Section. They directed dramas and even taken major roles where by they became popular amidst the students as well as the puplic. Dramas such as Ramayana, Maha Baratha, Harischanda were staged at that time which have been highly commenied by the general public.

In 1962, Mr. Jaganathan, a Londom Gratuate was appointed as the third Principal of the school. He has the distiction of beging the son - in - low of one time city father Mr. Natarajah. He and his wife Sakunthala Jeganathan - another london Gratuate, remdered invaluable services for the growth and development of the school. It was during this time the school was shifted to the New Town to be housed in a site just in front of the New Kadiresan Temple, and upgrated as a Maha Vidyalaya. Till 1973, he was the principal Whose services cannot be forgotten by any student at that time. He is a rare personality who maintained a very high standard of punctuality and discipline among the students and the staff, He came to school in a van guard car wearing a full shite that itself showed that he was an extra ordinary principal. This school that was considered & school of low standard, saw gigantic growth in his time and became a leading college that parents now considered it to be a great pride to get their children admitted

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to this scool. As a result the student population and the srength of the staff rose by leaps and bounds.

In 1973, Mr Gaanathapillai took office as the fourth Principal and after him Mr. Sivasubramaniyam was appointed as the Principal. It was during his time that the communal riot raised its ugly head in Sri Lanka. Anuradhapura too was affected by these riots. Tamils who lived in this Town for many genaration who had a very litle connection with the North or East were compelled to leave this Town leaving behind their movables and immovables. On account of this the school was abandoned and later it was closed for some time.

In 1980 Mr. Ratnasingham, took office as the sixth Principal. He had served this school ealier as an Assistant Teacher and such he knew well the short comings of this school, and took great efforts to over come these difficulties and to make this a perfect school. Unfortunately he died while in service.

In 1983 the communil riots broke out again and this time it was very severe. Most Tamils became refugees and had to seekasulum in the North and East much agaisnt their wish. This time they had to leave the Town with the intention 'never to return'

In view of this situation the school was closed for a long time. The musilm students of this school collected together and demanded the re - opening of the school. Then Mr Junaideen, an old student and as old teacher of the school had been fortunate enough to have been selected as principal to shoulder the big burden. He had to face a great challenge to bring back the school at its former glory. But he took it up most couragiously although he was very young and inexperienced at that time. His beloved wife Nona safina who had completed over Twenty years of teaching as a trained teacher shared her responsibilty and gave him all moral support to shoulder the heavy responsibily. The unlawful element that ran amock during the riot, had caused the school severe damage. All Valuable things had been re- moved from the buildings, the laboratory had been burgled But slowly but

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

steadily Mr Junaideen got the school back to normalcy through his persuation and constant / resentation to the authorities. He had to go house to house with his staff to collect the children who had given up by that time that the re - opening of the school was only a dream. The y responded very well and soon all the classes were full of children. Since Mr Junaideen was very good with parents and had a reasonable political influence, He was able to get the help from the local politicians for the development of the school.

Ho'ble K. B. Ratnayake when he was the Minister of Transport gave a large amount of mone out of his decentralisedbudget, for the constructoin of the Assembly hall. I am proud to mention here the Ho'ble Speaker was the patron of this school through out. With this money and fund raised from the parents and well - wisheres, the foundation for the Assesmebly was laid by Mr Antaraja and thereafter the supers was partly constructed, It was with the high hope of utilising it as assemebly Hall and then to use it as an Auditorium for cultural activities that the work on this building was started before it could be completed.

The communal riot broke and with that the construction came to a stand still. However we are grateful to the chief Minister, Provinacial council N. C. R. Mr. Mahindasoma for the completion of this builiding as it was an eyesore to the school and to the environment. But it is a matter of great regret that this auditorious is not yet handed over to the school but it is used by the provinoisl Council for its own use. The representation amde by the Principal, Staff and parents did not bring the desired effect. I hope the chief Minister would be so kind enough to re - consider thematter and hand over this building to Vivekandan which has the legitimate right over this building.

In the mean time, it should be brought to the notice of the general public that, some people having vested inteset try their leval best to amalgamate this school with the Muslim school. This move should not be encouraged at any cost. Vivkananda should have its own identity.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Up to date thousands of students have passed out of this school and they are doing very well in life. They carried with them the simplicity and discpline they have learnt from this school.

We hope the new government would help this school to be a fully euipped school. It needs more funiture, lad facilities additional staff and a pavilion to the playground. Top of all these the suditorium should be brought under the control and adiministration of the Principal of this school.

The Honourable speaker, Mr Ratanayake is the patron of this school. I humbly request him to use his influence with the authorities concerned to do what is needed for it upliftment.

Along with these improvements, I would like to appeal to the Governement to take necessary steps to restore the Kadiresan Temple and there by pave the way for amity and unity among all communities.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலைப் பேணுவோம்

செல்வி. ஒஸ்லி அப்துல் கபூர், (ஆசிரியை)
அ/விவேகானந்தா. த. ம. வி.

சுற்றாடல் மாசடைவதால் ஏற்படப் போகும் தீய விளைவுகள் பற்றியும், சுற்றாடலைப் பேணுவதன் முக்கியத்துவம் பற்றியும் சில ஆய்வுகளை சிந்திக்கலாமினேன். சுற்றாடல் எனும் போது இயற்கைப் புவியியல், புவியில் காணப்படும் கனியங்கள், அவற்றின் மீதான எதிர்த் தாக்கங்கள், புவியின் தட்ப வெப்ப வேறுபாடுகள், புவியைச் சுற்றியுள்ள அண்ட வெளிக் கோள்கள், அவற்றின் விளைவுகள், இத்தனையையும் எதிர் கொள்ள வேண்டிய புவியின் அனைத்து ஜீவராசிகள் பற்றிய விடயங்களின் தரவுகள் பற்றியும் அறிய வேண்டியதவசியம்.

சுற்றாடல் மாசடைதல் எனின் எதனால், எவரால், ஏன் மாசடைகிறது? அவற்றையெல்லாம் எழுத்துருவில் இச்சஞ்சிகையில் அடக்கிவிடத்தான் இடமுண்டா?

தண்ணீரும், எண்ணெய்யும் வெவ்வேறு தன்மையுடையன. இவையிரண்டையும் கொண்டு ஒரு கரைசலை ஆக்கமுடியாது. ஆயினும் இவற்றுடன் சவர்க்கார கரைசலை சேர்த்தோமானால் இம்மூன்றும் ஒன்றாகக் கலந்து கொள்கின்றன. இங்கு சவர்க்காரக் கரைசல் கொண்டுள்ள இரசாயனப் பொருட்களினால், எண்ணெய்யினதும் தண்ணீரினதும் இயற்கைத் தன்மையில் மாறுதல் ஏற்படுகிறது. அதாவது எண்ணெய்யும், தண்ணீரும் மாசடைகின்றன. இவ்வாறு சிந்தித்த போது இக்கட்டுரையை வரைய முற்பட்டேன்.

இயற்கைச் சுற்றாடலுடன் ஆங்காங்கே சில ஒவ்வாத பதார்த்தங்கள் கலப்பதனால், உயிரினங்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய விரும்பத்தகாத மாற்றங்களே "சுற்றாடல் மாசடைதலாகும்" என வரைவிலக்கணம் கூறலாம். மனிதன் தனக்குத்தானே அழிவை ஏற்படுத்திக் கொள்ளும் துர்ப்பாக்கியமான நிலையென்றும் இதனைக் கொள்ள முடியும்.

இன்று நாகரீகம் எனும் போர்வைக்குள் வளர்ந்து வரும் தொழில் நுட்ப இயந்திரமயத் தொழிற்சாலைகள், தொழில் நகரங்கள், போன்றவற்றிலிருந்து வெளிவரும் நச்சு வாயுக்களினாலும், தூசுத் துணிக்கைகளாலும் இயற்கை சுற்றாடல் மாறுகின்றது.

இலங்கையிலுள்ள 'லுனாவை ஏரி' பெறுமதிமிக்க நீர்த் தாவரங்களையும், உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இயற்கை அழகையும் நிரம்பப் பெற்ற இடமாக ஒருக்கால் விளங்கியது. ஆனால் இன்று இரத்மலானை, மொரட்டுவைப் பகுதிகளில் எழுந்துள்ள நாற்பதுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகளினால் வெளியேற்றப்படும் கழிவுகளினாலும், அங்குள்ள கடைத்தெரு வியாபாரிகளினால் அன்றாடம் கொட்டப்படுகின்ற குப்பை மற்றும் அழுகிய பதார்த்தங்களினால் தோன்றும் துர்நாற்றத்தினாலும் அந்நகரின் அழகிய தன்மை உருக்குலைந்து விட்டது. இப்பகுதிகளில் வாழும் மீனவர்கள் தமது ஜீவனத் தொழிலாகிய மீன் பிடித்தலைக் கைவிட்டு வேறிடம் பார்க்கும் நிலையும் உண்டாகியுள்ளது. இதனைக் கருத்திற் கொண்ட 'மத்திய சுற்றாடல் அதிகார சபை' மக்கள் நலனுக்காக யப்பானிய அரசினரின் நிதியுதவியைப் பெற்று, சில மாற்று வேலைகளை மேற்கொண்டுள்ளது குறிப்பிடக்கூடியதாகும்.

மேலும் கொழும்புக்கும் ஜயவர்தனபுரத்திற்கும் அணித்தாக பறவைகள் சரணாலயமொன்று அமைந்துள்ளது. இந்நிலையில் இங்கு வெளிநாட்டு நிறுவனமொன்று பல கோடி ரூபாய்களை முடக்கி மிக உயரமான கட்டிடங்களை நிறுவிக் கொண்டிருக்கின்றது. இக்கட்டிடங்கள் முடிவுறும் போது, அவற்றிலிருந்து ஏற்படும் பெரும் இரைச்சல், மின் வெளிச்சம், வாகன ஓசைகள் போன்றன நிச்சயமாக இங்கு அமைதியாக வாழ்ந்து வருகின்ற பறவைக் கூட்டங்களை அவ்விடத்தை விட்டு அகற்றிவிடும். பச்சைப் பசுமையும் அழகுமுள்ள அச்சரணாலயச் சூழல், இவ்வாறு மாசடைவதன் காரணமாக கட்டாந்தரையாகப் போகின்றது என்பதை மக்கள் உணர்ந்து சுற்றாடல் அதிகார சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறே "கண்டலம் வாவியை" முன்பார்வையாகக் கொண்ட தம்புள்ளப் பகுதியில் உருவாகி வரும் 'கண்டலமஹோட்டல்' சுற்றாடலை மாசுபடுத்தி விடும் என்ற எதிர்ப்புகளும் தோன்றியுள்ளன. அதே போன்று மகாவலி ஆற்றுப்படுக்கையையுடைய 'மகா பெரியதென' என்னும் இடத்தில் கட்டப்படும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. ஹோட்டல் உருவாகினால் அதிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் மகாவலி ஆற்றுடன் கலந்து அதனைப் பாவிக்கும் உயிரினங்களுக்கு நிச்சயமாக அழிவைக் கொண்டு வரும் என கற்றவர்களும், மற்றவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச ரீதியாக 'ஆக்டிக் சமுத்திரப் பிரதேசத்தை' சற்று நோக்குவோம். இங்குள்ள 'கோலா விரிகுடா' இன்று உலகிலேயே மிக அசுத்தமான பகுதியாக உள்ளதென அங்குள்ள மக்களினாலேயே அங்கு வரும் உல்லாசப் பயணிகளிடம் கூறப்படுவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக் 'கோலா விரிகுடா' தாவரங்களையும், பறவைகளையும், நீர்ப்படுக்கைகளையும் உள்ளடக்கிய இயற்கை அன்னையின் அரிய சொத்தாக விளங்கியதுடன், உல்லாசப் பயணிகளுக்கு சொர்க்க பூமியாகவுமிருந்தது. ஆனால் இன்று கருமையான அசுத்தமான பிரதேசமாக மாறிக் கொண்டிருக்கின்றது.

இப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் இருதய நோய், புற்று நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். பெண்களுள் பலர் கருச்சிதைவுக்குள்ளாவதுடன், அவயக் குறைபாடுள்ள மந்த புத்தியுள்ள குழந்தைகளைப் பிரசவிக்கும் தாய்மாராகவும் உள்ளதாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இன்னும் அவர்களது சராசரி ஆயுட்காலம் குறைந்து கொண்டிருப்பதாகவும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இவையெல்லாம் அச்சூழல் மாசடைந்ததனால் ஏற்பட்ட தீய விளைவுகளே.

மனிதன் தன் அறியாமையால் இயற்கையின் செல்வமாகிய காடுகளை அழித்து வருகின்றான். இதனால் வன உயிரினங்கள் அழிகின்றன, இயற்கைச் சமநிலை குழம்புகின்றது, மண்ணின் வளம் குறைந்து, மண்ணரிப்பும் வரட்சியும் கடுமையாக நிகழ்கின்றது, வளிமண்டல காபனீரொட்சைட் வாயுவின் செறிவு அதிகரித்து, பிரதேச வெப்பநிலையையும் கணிசமாக அதிகரித்து வருகின்றது.

தொழில் ரீதியாக நவீன இரசாயன வளமாக்கிகளும், கிருமி நாசனிகளும் கண்டு பிடிக்கப்பட்டு அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இக் கலவைகள் நீரின் காவுகைக்குட்பட்டு பெரும் நீர்நிலைகளை வந்தடைகின்றன. மேலும் மண் வளமாக்கும் அங்கிகளும் பாதிக்கப்பட்டு அழுகிய நிலையில் மனித பாவனைக்குரிய நீர் நிலைகளை வந்தடைகின்றன. இவற்றைப் பருகும், பயன்படுத்தும் மனிதனும், ஏனைய விலங்குகளும் பல வியாதிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்படுகின்றது.

சமுத்திரத்தின் அடியிலுள்ள எண்ணெய்ப் படிவங்களை ஆராய்வதால் ஏற்படுகின்ற கசிவுகளினாலும், கடல் விபத்துக்களின் போது கப்பல்களிலிருந்து வெளியேறுகின்ற எண்ணெய்ப் பாய்ச்சல்களினாலும் மற்றும் கடற்பிரதேசங்களில் மேற்கொள்கின்ற அணுவாயுதப் பரிசோதனைகளின் விளைவாகவும் கடல் வாழ் ஜீவன்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பெருமளவு பறவைகளும், டொல்பின்களும், மீன்களும் அழிந்து வருகின்றன.

புவியிலுள்ள நீர், நிலம், வளி இவ்வாறு மாசடைவதால் 'உயிரினங்கள் தொல்லைக்குள்ளாகும் நிலை' உருவாகலாமென விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

புவியைச் சுற்றி 15 தொடக்கம் 50 கிலோ மீற்றர் உயரம் வரை 'ஓசோன் படலம்' சூழ்ந்துள்ளது. சூரியனிலிருந்து பூமியை வந்தடையும் புற ஊதாக் கதிர்கள் மிகவும் ஆபத்தானவை. இவ் ஊதாக் கதிர்கள் புவியினுள் ஊடுருவுவதை 'ஓசோன் படலம்' தடுக்கின்றது. ஆனால் இவ் 'ஓசோன் படலம்' இன்று சிதைக்கப்படும் ஆபத்திலுள்ளது. குளிரூட்டிகள், வாசனைத் திரவியங்கள் முதலானவற்றில் பயன்படுத்தப்படும் 'குளோரோ புளோரோ காபன்' சேர்வைகளும், மிகையொலி விமானங்களும் இப்படலத்தை சிதைப்பதில் பெரும் பங்கு கொள்கின்றன. இச் சிதைவு காரணமாக ஊதாக் கதிர்கள் நேரடியாகப் பூமியின் மீது விழும். இது மனிதனில் தோல் புற்று நோயை ஏற்படுத்தி அவனது சுகாதார நிலைமையைப் பாதிக்கும்.

இவ்வாறே காடழிப்பு, சனத்தொகைப் பெருக்கம், கைத்தொழில் புரட்சி ஆகியவற்றின் விளைவுகளால் வளிமண்டல காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிக்கின்றது. இதனால் புவியில் விழும் ஒளிக்கற்றைகள் வெப்பக்கற்றைகளாக தேக்கப்படுவதுடன், தெறிப்படையும் ஒளிக்கற்றைகளின் அளவும் குறைக்கப்படும்.இதனால் புவியின் மேற்பரப்பு வெப்பநிலை 1.9 பாகை செல்ஸியசினால் அதிகரித்துள்ளமை சூழலியலாளர்களினால் காண்பிக்கப்பட்டுள்ளது. இதனையே 'பச்சை இல்லத் தாக்கம்' என விஞ்ஞானிகள் எடுத்துக் காட்டியுள்ளனர். கடல் மட்டம் அதிகரித்தல, காடுகள் பற்றி எரிந்து அழிதல், வெள்ளப் பெருக்கு, பசும் வெளிகள் காய்ந்து கட்டாந்தரையாக மாறல் போன்ற தீய விளைவுகள் இந்நிலைமை காரணமாக ஏற்படும்.

எமது நாட்டில் கூட சுற்றாடலிலுள்ள வளி, தரை என்பன வெப்பமடைவதால் ஏற்படும் தூசிப் படலங்களாலும் விரைந்தோடும் வாகனங்களால் மேலெழும் தூசிப் படலங்களாலும் வைரஸ் கிருமிகள் காவிச் செல்லப்பட்டு, அநேகர் கண் நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர். என்ற பத்திரிகைச் செய்திகளும் இதனைக் கோட்டிட்டுக் காட்டுகின்றன.

எனவே 'இயற்கையின் அங்கமான உயிரினமே, இயற்கையோடு வாழ்ந்துகொள். நீ தாக்கினால் நிச்சயம் அது உன்னைத் தாக்கி அழிக்கும் !' என்ற சீனப் பழமொழிக் கேற்ப நாம் சூழலைப் பேணுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுர விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயம்

யாழ்ப்பாணத்தில் சிறைப்பட்டிருந்த எனது வாழ்க்கை அநுராதபுரத்தில் திறந்து விடப்பட்டிருந்தது. கண்டிப்பும் சட்டதிட்டங்களும் நிறைந்த எனது குடும்பம் தந்தையார் எழுதுவினைஞராக வெளிமாவட்டத்தில் கடமை புரிந்தாலும் தாத்தாவை பராமரிக்க வேண்டிய சூழ்நிலையில் எனது தாயார், மற்றும் இரு தம்பிகளுடன் மூளாயிலேயே காலத்தை ஓட்டினோம். தாத்தாவின் மறைவின் பின்னர் குடும்பத்தவர் அனைவருமே ஒன்றாக அநுராதபுரத்தில் குடியேறினோம். 1975 ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் 10 வயதில் 6 ஆம் வகுப்பில் அநுராதபுர விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டேன். எமது வகுப்பாசிரியர் திரு. செல்வராசா அவர்கள் அன்பும் கண்டிப்பும் நிறைந்தவர். அதிபராக அவ்வேளை திரு. கணனாதப்பிள்ளை அவர்கள் பொறுப்பேற்றிருந்தார்.

அநுராதபுரத்தில் ஜெயந்தி மாவத்தையில் வசித்துவந்த எமக்கு கூப்பிடு தொலைவிலேயே ஸ்ரீ சித்தி விநாயகராலயம் (விவேகானந்த சபையுடன் அமைந்திருந்தது) ஸ்ரீ கதிரேசன் கோவில் அமைந்திருந்தமையால் (மூளாயில் எங்கள் குலதெய்வமான பிள்ளையாரும் முருகனும்) அடிக்கடி ஆலயத்திற்குல் செல்வது வழக்கமாகி விட்டது. கதிரேசன் கோவிலுக்கு முன்னதாக எமது வித்தியாலயமும் அமைந்திருந்தது. பாடசாலை வாழ்க்கை காலை 7.30 மணியிலிருந்து நண்பகல் 1.30 மணிவரையானது. எமது வகுப்பில் மாத்திரமல்ல பாடசாலை முழுவதும் ஒரு கூட்டுக்குடும்பம்போல, இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என அன்புடன் பழகினோம். சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் எனது தந்தையார் காலஞ்சென்ற கு. தங்கராசா அவர்களிடம் நானும் எனது நண்பர்களும் பாடங்கேட்டுப் படிப்பது வழக்கம். ஜெயந்தி மாவத்தை வீட்டை விட்டு தந்தையார் கடமையாற்றிக் கொண்டிருந்த காணி அபிவிருத்தி அலுவலகத்தின் விடுதியில் நாம் இடம்மாறி முப்பது கடையடிக்குச் சென்றோம். எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் 30 கடைகள் தொடராக இருந்தமையால் அந்தப்பெயர். அங்குதான் எனது நண்பர்களான கோணேஸ்வரன், லவண், சந்திரகுமார், தயாபரன், பிரதீப்குமார், பிறேம்குமார், மொகைடீன் ஆகியோர் வருவார்கள். சில வேளைகளில் எமது சிங்களப்பாட ஆசிரியை செல்வி பெரமுன அவர்களுடன் அநுராதபுரத்தின் புனித பிரதேசங்களுக்குச் சென்று அங்கு சில பாடங்களைப் படிப்போம். எமக்கு பாடசாலையில் ஒரு நாளைக்கு ஒரு பாடமாக சிங்களம் இருந்தது. பரீட்சைப் பெறுபேறுகளில் 40 க்கு மேல் எவ்வளவுதான் மற்றப்பாடங்களில் புள்ளிகள் பெற்றாலும் சிங்களம் மாத்திரம் 'கலண்டர் மாக்ஸ்தான்' (30 க்குக் குறைவு).

பாடசாலை வாழ்க்கையில் முக்கியமாக 1976 ஆம் ஆண்டு கதிரமலைநாதன் டீச்சரின் முயற்சியால் சமயதீட்சை – ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் பெற்றுக்கொண்டோம். பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்பட்டன. சனி, ஞாயிறு தினங்களில் நல்லை ஆதீனத்திலிருந்து திரு. திருஞானசம்பந்தன் அவர்கள் வந்து சொல்லித் தருவார். திருகோணமலைக்குச் சுற்றுலா சென்றோம். கண்ணியா வெந்நீரூற்றில் ஆசை தீரக்குளித்தோம். துறைமுகம் மற்றும் கோவில் பல சென்றோம். 12 நாட்கள் ஆனந்தமான உலா. 'வெளிக்கிட்டி விசுவமடுவிற்கு' நாடகத்தில் புவனமாக பெண் வேடத்தில் நடித்தேன். எனது காதலனாகவும் பின் கணவனாகவும் நண்பன் கோணேஸ்வரன் கூட நடித்தார். மர வேலை ஆசிரியர் (மன்னிக்கவும் பெயர் ஞாபகமில்லை) பொறுப்பேற்றிருந்த நாடகத்தைப் பார்த்த பல பெற்றோர்கள் எங்களுடைய சோடிப்பொருத்தத்தைப் பாராட்டியதை மறக்கமுடியாது.

இல்ல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பரீட்சைகளிலெல்லாம் பங்குபற்றினோம். வகுப்பில்கூட என்னதான் நண்பர்களாக இருந்தாலும் கல்வியில் போட்டா போட்டிதான். ஆனால் அடிதடி சண்டை ஏதுமில்லை. 1977 இல் திரு. சிவசுப்பிரமணியம் அதிபராக இருந்த வேளையில், நான் 8ஆம் வகுப்பில் கல்வி கற்றேன். எமது விஞ்ஞான ஆசிரியை செல்வி ஆறுமுகம் (தற்போது திருமணமாகி கொழும்பில் கல்வி போதிக்கின்றார்) எமது விஞ்ஞான ஆய்வு கூடத்தில் எமக்கெல்லாம் பரிசோதனை 8ஆம் வகுப்பிலேயே ஆரம்பத்திலிருந்தே செய்து காட்டி கல்வி புகட்டினார்கள். சந்தேகமிருப்பின் வீடுசென்று எமது சந்தேகங்களை இவருடனும் ஏனைய ஆசிரியைகளான செல்வி நமசிவாயம் (கட்டுவன்), செல்வி வேலுப்பிள்ளை (மாவிட்டபுரம்), ஆகியோரிடமும் கேட்டுத் தெளிவடைந்தோம்.

கௌரவ த. முகுந்தன்
யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

*R. V. Moorthy*

**No. 06 A, Railway Quarters,**

**RATMALANA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes & Heartiest Greetings*

*to*

A/Vivekananda T. M. V.
Anuradhapura.

**V. Sivasupramaniam**
**P. O. Box 644,**
**Seychelles**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Wiht The Best Compliments from*

# Mahajana Trade Centre
# (M. T. C)

**166 A, Market Site,**
**Anuradhapura.**
**T. Phone: 025-22948**

**Branchers:**

**Lukpahana Traders**
149 Market Site,
ANURADHAPURA.
T. Phone: 025-35315

**Mahajana Rice Mill**
Saliya Mawatha
ANURADHAPURA.
T. Phone: 025-35234

**Orient Jewellery**
Main Street,
GALGAMUWA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# C.T.C. Rice Mill

*Manufacturers & Dealers of*

**Quality Rice**

**Rice Flake (Aval)**

**Orid white (Ulundu)**

**Orid Black (Ulundu)**

562/91, Udaya Mawatha, Anuradhapura.

Telephone 025-23183

Fax : 025-35403

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org